Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 21

வெள்ளிக்கிழமை
17 டிசெம்பர் 2021

மார்கழி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

| | | |
|---|---|---|
| கொரோனா | | |
| நேற்று | 758 | |
| மொத்தம் | 577,724 | |
| உயிரிழப்பு | | |
| நேற்று | 21 | |
| மொத்தம் | 14,698 | |
| குணமடைவு | | |
| | 546,498 | |

# பரவுகிறது ஒமிக்ரோன்
# நேற்றும் மூவர் கண்டறிவு!

## தொற்றாளர்கள் எங்கே? தேடுகிறது அரசு

கொழும்பு, டிசெம்பர் 17
"ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் மூவர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதன்படி, நாட்டில் ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளாகியோரின் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்தது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது என்று, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர குறிப்பிட்டுள்ளார். 15 ➤



## "இந்தியா எவ்வளவு தூரம்?"

*பருத்தித்துறையில் கேட்டறிந்த சீனத்தூதர்*

யாழ்ப்பாணம், டிசெ. 17
பருத்தித்துறைக்குச் சென்ற சீனத்தூதுவர், எவ்வளவு தொலைவில் இந்தியா உள்ளது? என்று கேள்வி எழுப்பி 15 ➤

## மன்னாரையும் வளைக்க திட்டம் போடுகிறதா சீனா?



மன்னார், டிசெ. 17
இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங், மன்னாருக்கு நேற்றுச் சென்றார்.
மன்னாரில் எண்ணெய் வளம் உள்ளதாக அரசு கூறியுள்ள 15 ➤

## காணி சுவீகரிப்புக்கு எதிராக கீரிமலையில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 17
தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கீரிமலைப் பகுதியில் இன்று காலை 9 மணியளவில் காணி 15 ➤

*நீண்ட காலத்தின் பின்னர்*

## யாழ்ப்பாணத்தில் மலேரியா நோயாளி!

யாழ்ப்பாணம், டிசெ. 17
யாழ்ப்பாணத்தில் நீண்ட காலத்தின் பின்னர், மலேரியா நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார். காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா 15 ➤

## காணாமலாக்கப்பட்டோர் பற்றிய தீர்ப்பு ஒத்திவைப்பு

வவுனியா, டிசெ. 17
விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன் உட்பட இறுதிக்கட்டப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து 15 ➤

## அமெரிக்கத் தூதர் - மனோ குழு சந்திப்பு



கொழும்பு, டிசெ. 17
தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் கூட்டுச் செயற்பாடு, தேசிய அரங்கில் மலையகத் தமிழ் மக்களின் எழுச்சி, இலங்கை தேசிய இனப்பிரச்சினையில் அமெரிக்காவின் பங்கு, பொறுப்புக்கூறல், எதிர்வரும் 15 ➤

*புதிய தாழமுக்கத்தால்*

## 20ஆம் திகதிவரை மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17
இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் வங்கக்கடலில் தற்போது ஒரு தாழமுக்கம் உருவாகியுள்ளது. இது கிழக்கு, வடகிழக்குத் திசை 15 ➤

## உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 7இல்

கொழும்பு, டிசெ. 17
2022ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான கால அட்டவணை கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. 15 ➤

முச்சந்தி முரளி



"உவர் சீனத்தூதுவர் இஞ்சயிருந்து இந்தியாவுக்கு நீந்திப் போக பிளான் போடுறாரோ..?"

## விளையாட்டு வினையானது: இளைஞன் பரிதாபச் சாவு!

*யாழ். நாச்சிமார் கோவிலடியில் சம்பவம்*


யாழ்ப்பாணம், டிசெ. 17
யாழ். நாச்சிமார் கோவிலடியில், காதலியை விளையாட்டுக்கு அச்சுறுத்த முற்பட்ட இளைஞர் ஒருவர் அநியாயமாக உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 15 ➤

## 24 மணித்தியாலங்களில் 25 எரிவாயு வெடிப்புக்கள்

கொழும்பு, டிசெ. 17
நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 25 எரிவாயு வெடிப்புக்கள் பதிவாகியுள்ளன என்று, பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. 12 ➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொதுமக்களின் காணிகள் முல்லைத்தீவில் அபகரிப்பு

**வனவளத் திணைக்களம் மீது பொதுமக்கள் குற்றச்சாட்டு**

முல்லைத்தீவு, டிசெ.17

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, மதவளசிங்கன்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள காணிகளை வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளது என்று மக்கள் குற்றஞ்சாட்டு கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது 6 ஆயிரத்து 852 ஹெக்டேயர் நிலப்பரப்பை வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளது. அந்தப் பகுதியில் வனவளத் திணைக்களம் அண்மையில் பெயர்ப்பலகை ஒன்றை நட்டியுள்ளது.

அந்தப் பெயர்ப்பலகையில் நாகச்சோலை ஒதுக்கப்பட்ட வனம் என்றும், அந்த வனப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழையக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்களத்தால் புதிதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலப்பரப்பு, மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பகுதி. வனவளத் திணைக்களம் பெயர்ப்பலகை நடும்போது மக்களுக்கோ, பிரதேச பொது அமைப்புகளுக்கோ எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை.

பொதுமக்களின் காணிகள் அபகரிப்பை வனவளத் திணைக்களம் நிறுத்த வேண்டும். இந்தப் பிரச்சினை தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலருடன் கலந்துரையாடவுள்ளோம்- என்றனர். (எ-246)

### எதிரணி என்பதற்காக

# எல்லாவற்றையும் எதிர்க்கக்கூடாது

## மாநகரசபை பட்ஜெட் வாக்கெடுப்பு தொடர்பில் ஈ.சரவணபவன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், டிசெ. 17**

**எதிர்க்கட்சி என்றாலே ஆளும் கட்சியை எதிர்ப்பதுதான் பணி என்று நினைக்கக்கூடாது. மக்கள் நலன்சார்ந்து சிந்தித்தும் செயற்படவேண்டும். அதே போன்று எதிரணியையும் அரவணைத்துச் செல்லும்வகையில், அவர்களும் எதிர்ப்புத் தெரிவிக்காதவாறு மாநகரசபை பட்ஜெட்டை மேயர் முன்வைத்திருக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பட்ஜெட் நேற்றுமுன்தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. பட்ஜெட்டை கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் எதிர்த்திருந்தனர். ஆனாலும் பட்ஜெட் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இதன்மூலம் மணிவண்ணன் மேயராக தொடர்ந்து பதவி வகிக்கவும் வாய்ப்புக்கிட்டியது. இவ்வாறானதொரு நிலையில், பட்ஜெட் வாக்கெடுப்புத் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேலும் தெரிவித்ததாவது:

மிகக் குறுகிய காலத்தில் மாநகர மக்களின் மனதில் மேயர் மணிவண்ணன் இடம்பிடித்துள்ளார் என்பது மறுக்க முடியாத உண்மை. மாற்றான் தோட்டத்து மல்லிகை என்றாலும் மணம் வீசினால் அதைச் சொல்லத் தயங்கவேண்டியதில்லை. மாநகர மேயர்களில், சிறந்த செயல் வீரனாக மணிவண்ணனை மக்கள் நோக்குகின்றார்கள். அந்த உண்மையை ஒப்புக்கொள்வதால் எந்தவொரு பின்னடைவும் எமக்கு ஏற்படப்போவதில்லை.

இவ்வாறானதொரு நிலையில், அவரால் முன்வைக்கப்படும் பட்ஜெட் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டு அவர் பதவி விலகும் சூழல் ஏற்பட்டிருக்குமாக இருந்தால், மக்களின் கோபங்கள் அதனைத் தோற்கடித்தவர்கள் மீதே திரும்பும். அந்தப் பழியை கூட்டமைப்பு காலத்துக்கும் சுமக்க வேண்டியேற்பட்டிருக்கும். அதிர்ஷ்டவசமாக, கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்த்திருந்தாலும் பட்ஜெட் வெற்றி பெற்றிருக்கின்றது.

முன்னைய மேயர் இ.ஆனோல்ட், சபை உறுப்பினர்களின் பரிந்துரைகளை உள்ளடக்கியே கடந்த ஆண்டு பட்ஜெட்டை முன்வைத்திருந்தார். அவரை அரசியல் ரீதியான காரணங்களை முன்னிறுத்தி, இப்போதைய மேயர் மணிவண்ணன் உள்ளிட்ட தரப்பினர் தோற்கடித்திருந்தார்கள். அதற்குப் பழிவாங்கும் வகையில், மணிவண்ணனைத் தோற்கடிப்பது பொருத்தமானது அல்ல. மணிவண்ணன், ஆனோல்ட் விடயத்தில் செய்தது தவறு என்றால், அதே தவறை எமது கூட்டமைப்பு உறுப்பினர்களும் செய்வது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இந்த விடயத்தில் கட்சித் தலைமை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்தித்து செயற்பட்டிருக்கவேண்டும்.

அதேபோன்று மணிவண்ணனும், கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஆதரவை பட்ஜெட்டுக்குப் பெற்றிருக்க வேண்டும்.

சிறந்த ஆளுமையுள்ள தலைமைத்துவத்தை மாநகருக்கு வழங்குவதற்கு சகல அரசியல் தரப்பினரதும் முழுமையான ஆதரவு தேவை என்பதை மணிவண்ணன் மறக்கக்கூடாது. எதிர்காலத்தில் மேயர் மணிவண்ணன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்று பயணிக்கக் கூடியதாக தனது அணுகுமுறைகளை மாற்றியமைக்கவேண்டும், -என்றார். (ஒ-5)

# இனப்பிரச்சினை தீரும்வரை நாட்டுக்கு விடிவே கிட்டாது!

*உடன் பேச்சை ஆரம்பிக்குமாறு வலியுறுத்துகின்றார் ராஜித*

கொழும்பு, டிசெ.17

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டால் மட்டுமே இந்த நாட்டுக்கு எதிர்காலம் உண்டு.

இன ஐக்கியம் இல்லாவிட்டால் ஒருபோதும் நாட்டை அபிவிருத்தி நோக்கி அழைத்துச்செல்ல முடியாது- என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்திக்கொள்வதற்கு தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- தமிழ், முஸ்லிம் மக்களுடன் நாம் எவ்வளவு சகோதரத்துவத்துடன் வாழ்கின்றோம் என்பதில்தான் இந்த நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது. இன ஐக்கியம் இல்லாவிட்டால் எந்தவொரு நாட்டையும் கட்டியெழுப்ப முடியாது. 1956 இல் தனிச்சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டு எமது நாட்டில் அழிவுக்கான பாதை ஆரம்பித்துவைக்கப் பட்டது. ஒரு மொழியென்றால் இரு நாடுகள், இரு மொழிகளென்றால் ஒரு நாடு என அன்றே கொல்வின் ஆர்.டி. சில்வா எடுத்துரைத்தார். அவர் கூறியது போன்று இங்கு நடந்தது.

சிங்கப்பூரின் தந்தையெனப் போற்றப்படும் லீகுவான், முதலில் இன ஐக்கியத்தையே கட்டியெழுப்பினார். சிங்கப்பூரில் 75 வீதம் சீனர்கள் வாழ்ந்தாலும் மலேசிய மொழியில் தேசிய கீதம் எழுதப்பட்டது. இந்தியருக்கு வெளிவிவகார அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. இப்படிதான் இனங்களுக்கிடையில் நம்பிக்கையை ஏற்படுத்தி, இன ஐக்கியம் மூலம் சிங்கப்பூரை லீ குவான் கட்டியெழுப்பினார்.

ஆனால் எமது நாட்டில் இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்தினர். அதனால்தான் நாடு முன்னேறவில்லை.

எனவே, இனியாவது பொது இணக்கப்பாட்டுக்குவந்து பேச்சு நடத்தி, பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் இந்நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. இதனை நான் 1970 முதல் வலியுறுத்தி வருகின்றேன். அதற்காக குண்டுத் தாக்கு [illegible] [illegible] கின்றேன்-என்றார். (எ-44)

# விவசாயக் காணி விடுவிப்பு ஜனவரி 30க்கு முன்னர் தீர்வு

## மன்னார் கூட்டத்தில் முடிவு

மன்னார், டிசெ.17

வனவளப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களால் கையகப்படுத்தப்பட்டுள்ள விவசாய நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான காணிகளை விடுவிப்பது தொடர்பான கூட்டம் மன்னார் மாவட்டத்தில் நேற்று நடைபெற்றது. மக்களின் பயன்பாட்டுக் காணிகளை விடுவிப்பது தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தரத் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

வனவளப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களால் பாதுகாக்கப்படவேண்டிய காடுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான பிரதேசங்கள் மற்றும் கடந்த காலங்களில் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களை விடுவிக்கும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணத்தில் கடந்தகால போர் காரணமாக கைவிடப்பட்டிருந்த விவசாய நிலங்கள் பராமரிப்பின்றி காடுகளாக மாறியிருந்த நிலையில், வனப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களால் அவை பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டது. நேற்று நடந்த கூட்டத்தில், வனப்பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், துறைசார் அதிகாரிகள் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலர்கள் மற்றும் அதிகாரிகள் முன்வைக்கும் பல பிரச்சினைகள் உடனே தீர்க்க முடியாதவையாக இருக்கின்றன. விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டு எதிர்வரும் ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தலைமையிலான இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.(எ-56,27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்மறை வளர்ச்சியில் நாட்டின் பொருளாதாரம்

**கொழும்பு, டிசெ.17**

**2021ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 1.5 சதவீத எதிர்மறையான வளர்ச்சி வீதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**



இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2,536,490 மில்லியன் ரூபாவிலிருந்து 2021ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான நிலையான விலையில் 2,497,489 மில்லியன் ரூபாவாகக் குறைந்துள்ளது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தற்போதைய விலையில் 4,087,148 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில், 2021ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தற்போதைய விலையில் 4,132, 955 மில்லியன் ரூபாவாக 1.1 வீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. (எ-இ)



# நல்லூர் ஆலயத்தில் சீனத்தூதர் வழிபாடு

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட சீனத் தூதுவர் நேற்றுக் காலை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

பாதணிகளை அகற்றி, வேட்டி அணிந்து சைவ நெறிமுறைப்படி அவர் வழிபாட்டில் கலந்துகொண்டார்.

சீனத் தூதுவரு டன் வந்திருந்த தூதரக அதிகாரிகளும் சைவ நெறிமுறைப்படி வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

தூதுவரின் வருகையை முன்னிட்டு நல்லூர் ஆலய வளாகத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. (ம-125)

## சீனத் தூதுவருக்கு டக்ளஸ் 'கள்ளுக் கதை'

யாழ்ப்பாணம், டிசெ. 17

அரியாலை கடலட்டைப் பண்ணைக்கு நேற்றுக்காலை சென்ற சீனத் தூதுவருக்கு, 'பனங்கள்' தொடர்பில் பாடமெடுத்தார் அமைச்சர் டக்ளஸ்.

வடமாகாணத்துக்கு இரண்டு நாள் பயணமாக வந்துள்ள சீனத் தூதுவர் நேற்றுக் காலை அரியாலை கடலட்டைப் பண்ணையைச் சென்று பார்வையிட்டார். இதன்போது பனை மரமொன்றைத் தூதுவருக்குக் காண்பித்த டக்ளஸ் பனங்கள் பற்றியும் அவருக்குத் தெரிவித்தார். இதைக்கேட்டுத் தூதுவர் சிரித்தார். (ம)

## அரியாலை கடலட்டைப் பண்ணைக்கு சீனத் தூதுவர் பயணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 17

அரியாலை கடலட்டைப் பண்ணைக்கு நேற்றுக் காலை சென்ற சீனத் தூதுவர், அங்கு இடம்பெறும் பணிகளைப் பார்வையிட்டார்.

வடமாகாணத்துக்கு இரண்டு நாள் பயணமாக வந்துள்ள சீனத் தூதுவர் இங்குள்ள பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றார். தனது பயணத்தின் ஒரு பகுதியாகவே அவர் நேற்றுக் காலை கடலட்டைப் பண்ணைக்குச் சென்றார். (ம)

# டொலர் தட்டுப்பாட்டால் மூடப்படும் தூதரகங்கள்!

கொழும்பு, டிசெ.17

இலங்கையில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக அரசு வெளிநாட்டுத் தூதரகங்கள் சிலவற்றை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது.

செலவுகளைக் கட்டுப்படுத்தி அதன் ஊடாக டொலரைச் சேமிக்கும் நோக்குடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நைஜீரியாவுக்கான இலங்கைத் தூதரகம், சைப்பிரஸ் மற்றும் பிராங்புருட் ஆகிய நாடுகளுக்கான கொன்சோல் அலுவலகங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிராங்புருட் கொன்சோல் அலுவலகத்தை பேர்ளின் நகருக்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர், தற்போதைய சூழ்நிலையில் நைஜீரியாவில் பணிகளை முன்னெடுப்பது சிரமமானது. அனைத்து அமைச்சுக்களிலும் இவ்வாறான செலவு குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்தார்.

கடந்தவாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அந்நியச் செலாவணி கையிருப்பு மற்றும் செலவு குறைப்பு தொடர்பில் விசேட கவனம் எடுக்கப்பட்டது என்று கூறப்படும் நிலையில், வெளிவிவகார அமைச்சு இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. (எ-இ)





**அடிக்கிற கைதான் அணைக்கும். பிடுங்கிற கை தான் குடுக்கும். அதுதான் இப்ப வல்வெட்டித்துறை நகரசபை விசயத்திலயும் நடந்திருக்கு.**

**நகரசபையின்ர தவிசாளரா கருணானந்தராசா இருக்கேக்க, அவருக்கு கடும் குடைச்சல் குடுத்து சபையை ஒழுங்கா நடத்தவிடாமல் செய்தது இப்ப ஆட்சியைப் பிடிச்சிருக்கிற இதே சுயேச்சைக்குழுதான். பொலிஸ் ஸ்ரேசனில அப்பத்தைய தவிசாளர் முறைப்பாடு செய்யிற அளவுக்கு பெரும் குழப்பமெல்லாம் நடந்தது. அவர் கொரோனாவால செத்த பிறகு, காட்சியெல்லாம் தலைகீழாகிட்டுது.**

**சிவாஜிலிங்கம் தன்ர ஆளை தவிசாளராக கொண்டுவர வெளிக்கிட, சுயேச்சைக்குழு புகுந்து விளையாடி செல்வேந்திராவை தவிசாளராக்கிட்டுது. தன்னை மீறி தவிசாளராக வந்த செல்வேந்திராவை பட்ஜெட்டில பழிதீர்க்க சிவாஜி திட்டம் போட்டார். இந்தமுறை அவரின்ர திட்டம் பிழைக்கேலை. சிவாஜி வைச்ச குறியில, பட்ஜெட் 2 தரம் கவிழ, செல்வேந்திராவின்ர தவிசாளர் பதவி இல்லாமல் போட்டுது.**

**இப்ப அடுத்த தவிசாளரைத் தெரிவு செய்ய வேணும். ஆனால் புதிசா ஆரைத் தெரிவு செய்யிறதெண்டு குழப்பம். அதால செல்வேந்திராவையே தவிசாளராக்கச் சொல்லி சிவாஜிக்கும் அவரின்ர ஆதரவாளர்கள் அழுத்தம் குடுக்க, செல்வேந்திரா அணியோட போனில டீல் ஒண்டு பேசினார் சிவாஜி. திரும்ப செல்வேந்திராவை தவிசாளராக்க வேணும் எண்டால், கொஞ்ச நிபந்தனைகளை சிவாஜி போட்டார். அதில ஒண்டு தீருவிலில குமரப்பா- புலேந்திரன் தூபி இருந்த இடத்தில, தமிழருக்காக போராடின எல்லாருக்குமா பொதுத்தூபி வைக்க வேணும் எண்டதும் அடக்கம். ஆனால் செல்வேந்திரா அதுக்கு மாட்டன் எண்டு போட்டார். ( இப்ப சிவாஜி டீல் பேசின ரெக்கோடிங் எப்படியோ கசிஞ்சு, ட்ரெண்டாகிக் கொண்டிருக்கிறது வேற கதை)**

**எண்டாலும் மற்ற நிபந்தனைகளுக்கு ஓமெண்டு சொல்லி, முதல் பாதிக்காலம். செல்வேந்திரா அணியும், மிச்சக்காலம் சிவாஜி அணியும் ஆளுறது எண்டு ஒப்பந்தமும் எழுதி கையெழுத்து வைச்ச பிறகுதான் வாக்கெடுப்பு நடந்திருக்கு. இப்ப சிவாஜி அணி சப்போர்ட் பண்ணினதால செல்வேந்திரா திரும்பவும் தவிசாளராகிட்டார். ஆர் அவரின்ர பதவியைப் பறிக்க முன்னுக்கு நிண்டாரோ இப்ப அவரே அந்தப் பதவிக்கு வர உதவி செய்திருக்கிறார். இதுதானுங்கோ அரசியல்...!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 வருடங்களின் பின்னர் அரசியல் கைதி விடுதலை

**கொழும்பு, டிசெ. 17**
**15 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியொருவரை நிரபராதி எனக் கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவரை விடுதலை செய்துள்ளது.**

மானிப்பாய்வீதி, தாவடியைச் சேர்ந்த தேவராசா சிவபாலன் (வயது-45) என்பவரே விடுதலை செய்யப்ப ட்டுள்ளார்.
2006ஆம் ஆண்டு ஆயுதங்களை கொழும்புக்கு கடத்தி வந்தார் என்று குற்றம்சாட்டப்பட்டு, வத்தளை பகுதியில் வைத்து பயங்கரவாதத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்ய ப்பட்டுள்ளார். அதன்பின்னர் 2 வருடங்களாக விசாரணைகளின் பின்னர், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கொழும்பு நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. 15 வருடங்களாக நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்.
இந்தநிலையில் கடந்த 14ஆம் திகதி அவருக்கு எதிரான வழக்கில் அவரை நிரபராதி என கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவரை வழக்கிலிருந்து விடுதலை செய்தது.
இதேவேளை, அவரது மகளுக்கு ஒரு வயதும் நிரம்பாத நிலையில், அவர் கைது செய்யப்பட்டிருந்தார். தற்போது அவர் விடுவிக்கப்பட்டதும் தனது மகளை 15 வருடங்களின்பின்னர் கண்டு நெகிழ்ச்சியடைந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (து-இ)



## ஆலய முகப்பு வீழ்ந்து இளைஞன் படுகாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 17
வடமராட்சி கிழக்கு செபஸ்ரியார் ஆலயத்தின் முகப்பு திடீரென இடிந்து வீழ்ந்ததில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.
நேற்றுமுன்தினம் மாலை குடும்பமொன்று தங்கிநின்றபோதே அந்த முகப்பு இடிந்து வீழ்ந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதிலேயே குறித்த இளைஞன் படுகாயமடைந்துள்ளார். அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் விபத்துத் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-27)

## அதிகரிக்கும் சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, டிசெ.17
கடந்த 12 நாள்களில் 24 ஆயிரத்து 773 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.
கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் தற்போதுவரை ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 762 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இந்தியா, ரஷ்யா, பிரிட்டன், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, கசகஸ்தான், அமெரிக்கா, பிரான்ஸ், கனடா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் இருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (எ-இ)



## குழியிலிருந்து வெளிவரும் பெருந்தொகை ரவைகள்

கிளிநொச்சி,டிசெ.17
தனியார் காணியில் வெட்டப்பட்ட குழியிலிருந்து பெருந்தொகை துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டு வருகின்றன.
கிளிநொச்சி - கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன்கட்டு பூங்காவனச் சந்திப்பகுதியில் உள்ள தனியார் காணியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை குழி ஒன்றை வெட்டியபோது சில துப்பாக்கி ரவைகள் அடையாளம் காணப்பட்டன.
அதனையடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் இருந்து துப்பாக்கி ரவைகள் அடங்கிய இரு பெட்டிகளை மீட்டனர்.
இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக, குறித்த பகுதி கிராம அலுவலர் முன்னிலையில் அகழ்வுப்பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. அகழ்வின்போது பெருமளவான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டு வருகின்றன. (ஒ-4-113)

நாவற்குழி ஆட்கொணர்வு வழக்கு

## சாவகச்சேரி நீதிவான் மன்றில் இராணுவ அதிகாரி சாட்சியம்

நாவற்குழியில், 1996ஆம் ஆண்டு15 வயதுச் சிறுமி உட்பட 24 பேர் கடத்தி காணாமலாக்கப்பட்ட ஆட்கொணர்வு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரான, நாவற்குழி இராணுவ முகாமின் அப்போதைய பொறுப்பதிகாரி ஜெனரல் கெப்பெட்டிவலனா, சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றும் நேற்றுமுன்தினமும் முற்பட்டு சாட்சியமளித்தார்.
இந்த வழக்கு எதிர்வரும் மார்ச் 25 மற்றும் ஏப்ரல் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் விசாரிக்கப்படும் என்று குறிப்பிட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
1996 ஆம் ஆண்டு இவரது தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் 15 வயதுச் சிறுமி உட்பட 24 இளைஞர்கள் கூட்டாக காணாமற்போனார்கள். அந்த 24 பேரில், மூவர் சார்பாக, அவர்களின் பெற்றோர் 'வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டமை' தொடர்பான புதிய வழக்கை 2017ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.
உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வழக்கு 2020ஆம் ஆண்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.
இந்த வழக்கு கடந்த ஓகஸ்டில் சாவகச்சேரி நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது.
பிரதான சந்தேகநபரான மேஜர் ஜெனரல் கெப்பெட்டிவலனை நீதிமன்றில் முற்படுத்துமாறு பிரதி சொலிசிட்டர் ஜெனரலுக்கு நீதிமன்று கட்டளையிட்டிருந்தது.
இதன்படி, பிரதான சந்தேகநபர் மேஜர் ஜெனரல் கெப்பெட்டிவலன கடந்த இரண்டு நாள்களாக நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியமளித்தார். (து-இ)

## வன்முறைகளுக்கு தீர்வு பாடசாலைக் கல்வியே

மகேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.17
சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான வழிமுறைகளை, பாடசாலைக் கல்வியில் ஆரம்பிக்கவேண்டும் என்று யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.
வன்முறைகளை இல்லாதொழித்தல் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பான கலந்துரையாடல் யாழ். தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் தற்போது சிறுவர், பெண்கள் வன்முறைகள் அதிகரித்துள்ளன.
இதனைத் தடுப்பதற்கு பல்வேறு செயற்றிட்டங்கள் அரசினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் வன்முறைகளைத் தடுப்பதற்கு பாடசாலைக் கல்வி ஊடாக மாணவர்களை நெறிப்படுத்த வேண்டும்.
பாடசாலைப் பருவத்திலே மாணவர்கள் வன்முறைகள் எவை, அவற்றை எப்படித் தடுக்கமுடியும், சட்டத்தில் எவ்வாறான பாதுகாப்புக்கள் உள்ளன என்பது பற்றி அறிந்து கொள்வார்கள்.
அதேவேளை வன்முறைகளைத் தகர்த்து ஒழுக்கம்மிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அனைத்துத் துறையினரும் முன்வரவேண்டும். -என்றார். (ஒ-4-27)



## வீதி விளக்குகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17
நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரனால், பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து, வலி. மேற்கு பிரதேச சபைக்கு வீதி விளக்குகள் வழங்கப்பட்டன.
சுமார் 6 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், 210 வீதி விளக்குகள் வழங்கப்பட்டன.
வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரனின் கோரிக்கைக்கு அமைவாக, வீதி விளக்குகள் வழங்கப்பட்டன. (ஒ-4-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தடுப்பூசிகள் கட்டாயமாக்கப்படவில்லை

## உயர்நீதிமன்றத்தில் தகவல்

கொழும்பு, டிசெ. 17

**கொரோனாத் தடுப்பூசிகளைப் பெறுவது கட்டாயமாக்கப்படவில்லை. அவ்வாறு எந்தச் சட்டமும் இயற்றப்படவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.**

18 வயதுக்குட்பட்டவர்கள் கொரோனாத் தடுப்பூசியைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்று கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்றது. இதன்போதே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சட்டப் பிரதிநிதி இந்தத் தகவலை நீதிமன்றுக்கு அறிவித்தார்.

தடுப்பூசியைப் பெற விரும்பும் எந்தவொரு நபரும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளலாம். இது தொடர்பாக கட்டாய விதிமுறைகள் எதுவும் வெளியிடப்படவில்லை என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சட்டப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார். (ம)



# கஞ்சாவுடன் மூவர் கைது

வவுனியா, டிசெ.17

வவுனியாவில் கஞ்சாப் பொதிகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் மூவரை, வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

15 மில்லிகிராம் கேரளக் கஞ்சாவுடன், செட்டி குளத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள், வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஒ-ரி1-110)

# சமையல் எரிவாயுவின் செறிவில் ஐயப்பாடு!

கொழும்பு, டிசெ. 17

லிட்ரோ நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்டு தற்போது உஸ்வெட்டகெய்யாவ கடற்பகுதியில் நங்கூரமிடப்பட்டுள்ள மற்றுமொரு கப்பலில் அடங்கியுள்ள சமையல் எரிவாயுவின் செறிமானம் தொடர்பில் ஐயம் நிலவுகின்றது.

இதற்குமுன்னர் தரமற்ற சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்த நிறுவனமே இதனையும் இறக்குமதி செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது குறித்த கப்பலில் உள்ள சமையல் எரிவாயு மாதிரிகள், இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம)

# அபிவிருத்திக்கு குழு அமைக்குக

சாவகச்சேரி, டிசெ.17

சாவகச்சேரி நகரசபையால் ஆரம்பிக்கப்படவுள்ள சிறுவர் பூங்கா மற்றும் இந்து மயான அபிவிருத்திகளை குழுக்கள் அமைத்து முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் அமர்வில், உறுப்பினர் க.கஜீதன் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

நகரசபை எல்லைக்குள் சிறுவர்கள் பெரியவர்களுக்கான தனியான பொழுதுபோக்கு இடங்கள் இல்லாததால் அமைக்கப்படும் சிறுவர் பூங்கா வினைத்திறன் மிக்கதும் அனைவரையும் கவரக்கூடிய வகையிலும் அமைக்கவேண்டும்.

அவ்வாறு சபை எல்லைக்குட்பட்ட கண்ணாடிப்பிட்டி மற்றும் கொல்லங்கிராய் இந்து மயானங்களும் சிறந்த முறையில் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-4-9)

# தலதா மாளிகை வாயிலில் 'ரவை'யுடன் பெண் கைது

கொழும்பு, டிசெ. 17

கண்டி ஸ்ரீ தலதாமாளிகைக்கு வருகைதந்த பெண்ணொருவரின் கைப் பையிலிருந்து ரி-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் தோட்டா ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அதனையடுத்து அந்தப்பெண் தலதா மாளிகை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அவர், தலதா மாளிகைக்கு பிரதான நுழைவாயிலின் ஊடாகச் செல்வதற்கு முயற்சித்தபோது, அங்கிருந்த ஸ்கேன் கருவி அபாய ஒலியை எழுப்பியுள்ளது. அதனால், அந்தப் பெண்ணின் கைப்பையை சோதனைக்கு உட்படுத்தியபோதே தோட்டா கைப்பற்றப்பட்டது. (த-இ)

# உரிமை கோரப்படாத நோயாளியை பொறுப்பேற்கவும்

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்ப்பாணம், ஆத்தி சூடிவீதியைச் சேர்ந்த எஸ்.குணாளன் (வயது - 59) என்பவர், கடந்த செவ்வாய்க்கிழமை வீதியில் விழுந்த நிலையில், யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் சுயநினைவு குறைந்து காணப்படுவதால், உறவினர்கள் உடனடியாக மருத்துவமனையுடன் தொடர்பு கொண்டு நோயாளியைப் பொறுப்பேற்குமாறு மருத்துவமனைப் பிரதிப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-ரி1)

## எரிவாயு அடுப்பு வெடிப்பு எதிரொலி

# மண்ணெண்ணெய் அடுப்பின் விலை சடுதியாக உயர்ந்தது

யாழ்ப்பாணம், டிசெ. 17

சந்தையில் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் மின்சார அடுப்பின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

சமையல் எரிவாயு விநியோகம் சீரான நிலைக்குத் திரும்பவில்லை.

அத்துடன் ஆங்காங்கு எரிவாயு வெடிப்புச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

இதனால்தான் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் மின்சார அடுப்புகளின் விலைகள் அதிகரித்துள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட மண்ணெண்ணெய் அடுப்பு ஒன்றின் விலையானது தற்போது 8 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், புறக்கோட்டைமற்றும்புறநகர்ப் பகுதிகளில் மண்ணெண்ணெய் அடுப்புகள் இல்லாத நிலையும் ஏற்பட்டுள்ளது -என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம)

# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையால் நடத்தப்பட்ட இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டில் கௌரவிக்கப்பட்ட புலமையாளர்களுள் ஒருவரான பண்டிதர் க. உமாமகேஸ்வரம்பிள்ளைக்கு கௌரவிப்பு இடம்பெற்றது.

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர்.ம.இரகுநாதனும், விரிவுரையாளர்கள் ஈ. குமரன், த.அஜந்தகுமார் ஆகியோரும் இணைந்து அவருக்கான கௌரவத்தை அவரது இல்லத்தில் வழங்கினர். (ஒ-ரி1)



# ஒளிவிழாவும் கலைவிழாவும்

சாவகச்சேரி, டிசெ.17

சாவகச்சேரி புனித தோமஸ் முன்பள்ளி சிறார்களின் ஒளிவிழாவும் கலைவிழாவும் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அருட்பணி ஆ.கமலகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபர் உதய குமாரி ஸ்ரீபாஸ்கரன் கலந்து கொள்வார். (ஒ-ரி1-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களிடம் ஜீவகாருண்யம்!

## 'வீ பீடர்ஸ்' அமைப்பு முன்னெடுப்பு


யாழ்ப்பாணம், டிசெ. 17

**வடக்கில் உள்ள ஆதரவற்ற விலங்குகளுக்கு உணவளித்து வரும் 'வீ பீடர்ஸ்' அமைப்பு பாடசாலை மாணவர்களிடம் ஜீவகாருண்யத்தை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.**

இதன் ஒரு பகுதியாக அண்மையில் யாழ்ப்பாணம் - திருநெல்வேலி சைவத்தமிழ் மகாவித்தியாலயத்தில் கருத்தரங்கையும் முன்னெடுத்துள்ளது.

அடுத்த தலைமுறையினரிடையே ஜீவ காருண்யச் சிந்தனைகளை அதிகரிப்பதற்காகவும், ஆதரவற்ற வாயில்லா ஜீவன்கள் பற்றிய விழிப்புணர்ச்சிகளை விதைப்பதற்காகவும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் இனிவரும் காலங்களில் வீட்டு விலங்குகள் தெருக்களில் பசியோடும், விபத்துக்களோடும், அங்கவீனங்களோடும், நோய்களோடும் வாழ நேரிடுவதைக் குறைக்க முடியும் என்றும் அந்த அமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.



'வீபீடர்ஸ்' அமைப்பானது வீடற்ற விலங்குகளுக்கான உணவை வழங்கி வருதல், வாயில்லா ஜீவன்களுக்கான இலவச மருத்துவ சேவைகள், தெருவோர நாய்க்குட்டிகள், பூனைக்குட்டிகள் போன்றவற்றை வீடுகளில் வளர்க்கத் தயாராக உள்ளவர்களிடம் சேர்ப்பித்தல், பாடசாலை, பல்கலைக்கழகம், இளைஞர் அமைப்புக்கள் மற்றும் சமூகத்திடையே விலங்கு நலன்சார் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இணையத்தில் காணி உறுதி

கொழும்பு, டிசெ.17

காணி உறுதிப்பத்திரப் பிரதிகளை இணையம் ஊடாக பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுதல் இது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது என்று காணி பதில் பதிவாளர் நாயகம் எம்.வீரசேகர தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

# பிரியந்தவின் குடும்பத்துக்கு இழப்பீடு கையளிக்கப்பட்டது

கொழும்பு, டிசெ. 17

பாகிஸ்தானின் சியால்கோட் பகுதியில் கலகக் கும்பலால் கொடூரமாகக் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்துக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

இதுதொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

பிரியந்த குமாரவின் மரணம் தொடர்பில் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், உயிரிழந்தவரின் குடும்பத்துக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி வருவதாக குறிப்பிட்டார். தொழில்தருநர் மற்றும் பாகிஸ்தான் அரசிடம் இருந்து நிதிப்பயன்கள் கிடைப்பதை உறுதி செய்யுமாறு தெரிவித்தார் என்றுள்ளது. (ம)

# பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

கொழும்பு,டிசெ.17

அரச சேவைப் பயிற்சிக்காக இணைக்கப்பட்டுள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்கும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர், நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்தமுறை வரவு - செலவுத் திட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று அரச சேவை, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)



# ரயில் மோதியதில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

ரயில் வருவதை அவதானிக்காது, தண்டவாளத்தில் அமர்ந்து இருந்த இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார்.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பை நோக்கி நேற்று அதிகாலை புறப்பட்ட ரயில் கொடிகாமம் - சாவகச்சேரி இடைப்பட்ட தண்டவாளத்தில் பயணித்தபோது விபத்து நடந்துள்ளது. குறித்த இளைஞன் விசேட தேவையுடையவர்.

அவர் ரயில் வந்தது தெரியாமல் தண்டவாளத்தில் இருந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. காயமடைந்த இளைஞன் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-4-27)

# பேசாலையில் சனிக்கிழமை ஊர் மறியல்

மன்னார், டிசெ. 17

பேசாலையில் டெங்கு அபாயம் மிகையாக உள்ள நிலையில், இந்த அபாயத்தில் இருந்து மக்களைக் காப்பாற்றிக்கொள்ளும் முகமாக நாளையதினம் அங்கு.மிகப் பெரும் துப்புரவுப் பணிகளை (ஊர் மறியல்) முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக மன்னாரில் பல பகுதிகளிலும் டெங்குத் தாக்கம் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக பேசாலையில் நிலைமை மோசமாகலாம் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்குச் சபையினரின் ஏற்பாட்டில் நாளை அங்கு முழுமையான துப்புரவுப் பணிகளை (ஊர்மறியல்) மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம-60)

# கௌரவிப்பு

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் அங்கத்தவர், பணியாளர், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் புலமைப் பரிசில் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சங்கத் தலைவர் நா. கணேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி. சந்திரசேகரம் கலந்து கொண்டார்.

"எதிர்காலத்தில் அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு, அவர்களுடைய தொழிற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டும். அங்கத்தவர்களின் நேரடிப் பங்களிப்புடன் திறம்பட இயங்கும் சங்கங்கள் என்றால் அது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்" என்று நிகழ்வில் உரையாற்றிய உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ஒ-4-63)

# வெடிக்காத இரு ஷெல்கள் மீட்பு

கிளிநொச்சி, டிசெ.17

கிளிநொச்சி - முரசுமோட்டையில், வயல் காணியைத் துப்புரவு செய்தபோது, இரண்டு மோட்டார் ஷெல்கள் அடையாளம் காணப்பட்டன.

அதனையடுத்து கிளிநொச்சிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

நீதிமன்ற அனுமதியுடன் ஷெல்களைச் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4-113)



# தப்பிய தொற்றாளர் மடக்கிப் பிடிப்பு

கொழும்பு,டிசெ.17

கொரோனா சிகிச்சை நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற தொற்றாளர் மீண்டும் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பண்டாரவளை மாவட்ட மருத்துவமனையில் இடம்பெற்றது. சிகிச்சை நிலையத்தின் கண்ணாடியை உடைத்து தொற்றாளர் தப்பிச் சென்றுள்ளார். அவர் தப்பிச்சென்றதை அருகில் இருந்த ஒருவர் கைபேசியில் வீடியோவாக பதிவு செய்தார்.

அதனையடுத்து பிரதேசவாசிகளால் அவர் மடக்கிப்பிடிக்கப்பட்டு மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கேந்திரப் போட்டிகளுக்கு இம்மியும் இடமளிக்காதீர்...!

சீனத் தூதுவர் ஓ கீசென்ஹொங் இரண்டு நாள்கள் பயணமாக வடமாகாணத்துக்கு வருகைதந்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளையும் பார்வையிட்டுள்ளார். இந்தச் சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக பருத்தித்துறைத் துறைமுகத்துக்கும் சென்றுள்ளார் கீசென்ஹொங். இலங்கைக்கு சீனாவால் திணிக்கப்பட்ட அளவுக்கதிகமான கடன் சுமைகளால், அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நிலையில், பருத்தித்துறைத் துறைமுகத்தையும் சீனா இலக்குவைக்கின்றதா என்ற கேள்வி இங்கே எழுவது இயல்பானது- யதார்த்தமானதும்கூட.


அத்துடன் இலங்கை - இந்தியா உறவுபோன்றே, இலங்கை - சீனா இடையிலான உறவும் என்ற கருத்தையும் யாழ்ப்பாணத்தில் வைத்து வெளிப்படுத்தியுள்ளார் சீனத் தூதுவர். ஆக, அவருடைய பயணம் வெறுமனே இலங்கை - சீனா இடையிலான உறவை மட்டுமல்லாது, அதற்கப்பால் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகர்வுகளையும்கொண்டது என்பதை தூதுவரின் கூற்று கட்டியம் செய்கின்றது.

இந்தியாவைப்போன்று சீனாவுடனும் நல்லுறவைப் பேணுவதற்கு இலங்கை விரும்புகின்றது என்பது வரவேற்கத் தக்கதுதான். பூகோள அரசியல் என்பது இவ்வாறான பின்னிப் பிணைதல்களுடன் தொடர்புடையது. அதை மறுப்பதற்கில்லை. ஆனால், இந்த உறவானது ஒன்றையொன்று முறிக்காமலும் ஒன்றையொன்று பகைக்காமலும் இருக்கவேண்டும். அதுதான் இங்கே முக்கியமானது - முதன்மையானது.

இந்தியாவுக்கும் - சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவென்பது அவ்வளவு இறுக்கமானதல்ல. இது வெள்ளிடைமலை. இந்திய - சீன இராணுவங்களுக்கு இடையில் அவ்வப்போது துப்பாக்கிப் பிரயோகங்களும் எல்லையில் பரஸ்பர அத்துமீறல்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறிருக்கையில் யாழ்ப்பாணத்தில் சீனாவை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் நகர்வுகளும் சீனாவின் நடமாட்டமும் இந்தியாவை நிச்சயம் கோபப்படுத்தவே செய்யும்.

இலங்கை கேந்திர முக்கியத்துவம் மிக்கதொரு இடம். இந்தியாவுக்கு மிக அருகில் இலங்கை இருப்பதால், தனது நகர்வுகளின்போது, குறிப்பாக வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் இந்திய நலன்களைப்பற்றிச் சிந்திக்கவேண்டிய தார்மீகக் கடமை இலங்கைக்கு உண்டு. காரணம் இந்தியாவை சீனாவோ அல்லது இதர தரப்போ உளவு பார்ப்பதற்கு யாழ்ப்பாணத்தை விட ஆகச்சிறந்த இடம் இந்த வட்டகையிலேயே இல்லை. இவ்வாறிருக்கையில், 'இறைமை' என்ற ஒன்றைக் காரணம்காட்டி, தன் அத்தனை நடவடிக்கைகளையும் இஷ்டம்போல இலங்கையோ சீனாவோ முன்னெடுத்துவிட முடியாது.

மாறாக, அவ்வாறு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இலங்கை - சீனா இடையிலான உறவைப் பலப்படுத்துகின்றதோ இல்லையோ, இலங்கை - இந்தியா இடையிலான உறவுகளைப் பலவீனப்படுத்தி - நலினப்படுத்திவிடும். இராஜதந்திரம் என்பது ஒன்றைப்பிடித்துக் கொண்டு இன்னொன்றைக் கைவிடுவதல்ல. இந்தியாவும் வேண்டும் சீனாவும் வேண்டும் என்ற தொலைதூரப் பார்வைதான் இந்தக் கேந்திர முக்கியத்துவம் மிக்க வாழிடத்துக்கும் பிராந்திய இராஜதந்திரத்துக்கும் மிகப்பொருத்தமானதாக அமையும். ஆதலால், சீனாவை கொஞ்சம் தூரமாக குறிப்பாக வடக்குக்கு வெளியே வைத்திருப்பதுதான் இலங்கைக்கு நல்லதும் -அழகும்....!




# உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு! அமைச்சரவைப் பத்திரம் தயார்

**கொழும்பு, டிசெ. 17**

**உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒரு வருடத்துக்கு ஒத்திவைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதென நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. இதற்கான அமைச்சரவைப் பத்திரம் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோனால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.**

கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான பத்திரம் முன்வைக்கப்பட்டிருந்தாலும் அது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோருடன் தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடிய பின்னர் அமைச்சரவையில் இந்த விவகாரம் ஆராயப்படவுள்ளது என அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் தரப்பு தெரிவித்துள்ளது.

பிரதேசசபை, நகரசபை மற்றும் மாநகரசபைகள் அடங்கிய உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் நிறைவுக்கு வருகின்றது.

இந்த நிலையில் அதன் பதவிக் காலத்தை ஒருவருடம் வரை நீடிப்பதற்கான அதிகாரம் துறைசார் அமைச்சருக்கு இருக்கின்றது. இதன் பிரகாரமே பதவிக் காலத்தை நீடிப்பதற்கான யோசனையை முன்வைப்பதற்கு அமைச்சர் தயாராகி வருகின்றார்.

(ம-44)

# கோத்தாபய ராஜபக்ச அரசு இராணுவத்தையே நம்பும்

## ஆளுங்கட்சி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.17

எமது அரசு இராணுவத்தை நம்புகின்றது. எதிர்காலத்திலும் இராணுவத்தின் ஒத்துழைப்புப் பெறப்படும். அதேபோல குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முற்படும் எதிரணிக்கு அதற்கான வாய்ப்பை வழங்கமாட்டோம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு இராணுவத்திடம் கையளிக்கப்படுகின்றதென எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினார். எமது அரசு இராணுவத்தை நம்புகின்றது. இதனால்தான் ஜேஆர், பிரமேதாஸ, ரணில் போன்றவர்களால் முடியாமற்போன போரை எம்மால் முடிவுக்குக் கொண்டுவரமுடிந்தது. அதேபோல கொரோனா பெருந்தொற்றின் போது தடுப்பூசித் திட்டம் வெற்றியளிக்க சுகாதாரத் துறையினருக்கு இராணுவத்தினர் பெரும் பங்களிப்பை வழங்கினர். எதிர்காலத்திலும் தேவைகளின் நிமித்தம் ஒத்துழைப்பை பெறுவோம். இதனால் மக்கள் பிரதிநிதிகளின் கௌரவம் பாதிக்கப்படாது. அபிவிருத்தி நடவடிக்கைக்கு இராணுவத்தைப் பயன்படுத்துவது தவறானதல்ல.

அதேவேளை, இந்த அரசு வீட்டுக்குச் செல்ல வேண்டும் எனவும், ஆட்சியை முன்னெடுக்க முடியாவிட்டால் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். அவரால் இந்த அரசை சட்டப்பூர்வமாகவோ அல்லது வேறு வழியிலோ கவிழ்க்கமுடியாது. தற்காலிக அரச எதிர்ப்பு அலையை உருவாக்கலாம். அது நிரந்தரமாக அமையாது என்றார். (எ-44)

**நாளை**

**18.12.2021**
**சனிக்கிழமை**
**மார்கழி 03**

சுபநேரம் : பி.ப. 03.23 - பி.ப. 04.53
ராகுகாலம்: காலை 09.23 - மு.ப.10.53
பூரணை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.17

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ஆண்டு தோறும் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முன்னெடுக்கப்படும்.

இது தொடர்பில் அறிவுறுத்தல்கள் ஒலிபெருக்கி வாயிலாக மக்களுக்கு இன்று தெரிவிக்கப்படும்.

எனவே டெங்கு நுளம்பு பெருக ஏதுவான பொருள்களை சேகரித்து பொதிசெய்து வைக்குமாறு சங்க உறுப்பினர்கள் மக்களைக் கேட்டுள்ளனர். பண்டத்தரிப்பு இலங்கை வங்கிக் கிளையினரின் அனுசரணையில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஒ-4-இ)

# இளைஞன் கௌரவிப்பு

தென்மராட்சி,டிசெ.17

**தென்மராட்சி - வரணியைச் சேர்ந்த சியானீஸ் மதுசன் என்பவர், வடவரணி கந்தசுவாமி ஆலய முன்றிலில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.**



கடந்த வியாழக்கிழமை அரியாலை பஸ் தரிப்பிடத்தில் தவறவிடப்பட்ட தாலிக்கொடி உள்ளிட்ட தங்க ஆபரணங்கள் அடங்கிய கைப்பையை கண்டெடுத்த இளைஞன், அதனை உரிமையாளரிடம் நேரில் சென்று ஒப்படைத்தார்.

இளைஞனின் நேர்மையைப் பாராட்டி நேரில் சென்றும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் பலரும் பாராட்டி வருகின்றனர்.

வடவரணி கந்தசுவாமி ஆலய முன்றிலில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், இளைஞனுக்கு பொன்னாடை போர்த்தி, வாழ்த்துமடலை வழங்கிக் கௌரவித்தார்.

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் சி.பிரபாகரன் இளைஞனுக்கு சந்தன மாலை அணிவித்து கௌரவித்தார். குலானந்த குளத்து முருகமூர்த்தி ஆலய நிர்வாக சபைத்தலைவர் குணரத்தினம் இளைஞனுக்கும், அவரது தாயாருக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஒ-4-159)



# வீதியைக் கடந்த சிறுவனை மோதித் தள்ளியது வாகனம்

கிளிநொச்சி,டிசெ.17

வீதியைக் கடக்க முற்பட்ட சிறுவனை, ஆடைத் தொழிற்சாலை வாகனமொன்று மோதித்தள்ளியது. இந்த விபத்து கிளிநொச்சி ஏ-9 வீதி 155 ஆம் கட்டைப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த 7 வயதுச் சிறுவன் கிளிநொச்சி மருத்துவமனையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தனியார் கல்வி நிலையம் சென்ற சிறுவன், ஏ-9 வீதியின் மறுபுறத்தில் காத்திருந்த தாயிடம் செல்வதற்காக வீதியைக் கடக்க முற்பட்டபோது விபத்துக்குள்ளானார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-214)

# மன்னாரில் எகிறும் டெங்குத் தொற்று

*மக்களுக்கு எச்சரிக்கை*



மன்னார்,டிசெ.17

மன்னார் மாவட்டத்தில் மீண்டும் டெங்குத் தொற்று அதிகரித்து வருவதால், மக்கள் நுளம்பிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்-என்று மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி செந்துபத்ராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் பெய்த கன மழையால் மன்னார் மாவட்டம் பெரும் வெள்ளக்காடாக காட்சி அளித்திருந்தது. இதனால் சில இடங்களில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. டெங்குத் தொற்று இனங் காணப்பட்ட இடங்களில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த நவம்பர் மாதத்தை விட, டிசெம்பர் மாதம் டெங்குத் தொற்றாளர்கள் சடுதியாக அதிகரித்துள்ளனர்.

எனவே ஒவ்வொருவரும் தங்கள் இருப்பிடங்களையும், சுற்றாடல்களையும் நுளம்பு பெருகா வண்ணம் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-56)

# நஷ்டஈடு வழங்கல்

முல்லைத்தீவு, டிசெ.17

துணுக்காய், மாந்தைகிழக்கு, ஒட்டுசுட்டான்,புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 282 பேருக்கு நஷ்ட ஈட்டுக் காசோலைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

நஷ்ட ஈட்டுக்கு அனுப்பப்பட்டு காசோலைகள் கிடைக்கப் பெற்றவர்களுக்கான காசோலைகள் மாவட்டத்தின் 5 பிரதேச செயலகங்களிலும் பிரதேச செயலர்கள் தலைமையில் வழங்கப்பட்டன.

காசோலைகளை, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் வழங்கி வைத்ததுடன், நஷ்ட ஈட்டுக்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்ப ஒழுங்குக்கு அமைய காசோலைகள் கிடைக்கப்பெறுமிடத்து தொடர்ச்சியாக வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். (ஒ-ரி1-19)



# காற்றாலை மின் உற்பத்தி பேசாலைக்குப் பாதிப்பு

*மீனவர்கள் குற்றச்சாட்டு*

மன்னார்,டிசெ.17

மன்னார், பேசாலை தொடர்ந்தும் வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்வதற்கு, அங்கு மேற்கொள்ளப்படும் காற்றாலை மின் உற்பத்தி செயற்பாடே காரணம் என்று பேசாலை மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மீனவர் சங்கத் தலைவர் யோகராசா தெரிவிக்கையில்:-

கடந்த காலங்களில் பெய்யும் மழையால் ஏற்பட்ட வெள்ளம், நடுக்குடாப் பகுதியில் உள்ள 16 ஓடைகள் வழியாக கடலுக்குள் கலந்துவிடும். ஆனால் இந்த முறை வந்த வெள்ளம் வடிந்தோட முடியாமல் தேங்கி நிற்கின்றது.

காற்றாலை மின்சாரக் கோபுரம் அமைக்கும் போது அகழப்பட்ட மண்ணால் ஓடைகள் மறைக்கப்பட்டுள்ளன. அத்துடன் புதிய வீதிகள் 4 அடிக்கு உயர்த்தப்பட்டுள்ளன.

இதனால் பேசாலை, முருகன்கோவிலடி, கரிசல் புதுக்குடியிருப்பு போன்ற அனைத்துப் பகுதிகளிலும் வெள்ளம் தேங்கியுள்ளது.

இது தொடருமானால் காற்றாலை மின்சார அமைப்பினருக்கு எதிராக ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் முறைப்பாடு செய்ய நேரிடும். என்றார். (ஒ-4-213)

# 2 பஸ்கள் மோதி அறுவர் படுகாயம்

வவுனியா, டிசெ.17

வவுனியா, பூவரசங்குளத்தில் நேற்றுமுன்தினம், இடம்பெற்ற பஸ் விபத்தில் ஆறுபேர் காயமடைந்தனர்.

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த அரச பஸ்ஸும், அதே திசையில் பயணித்த தனியார் பஸ்ஸும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்து இடம்பெற்றது.

விபத்தில், அரச பஸ்ஸில் பயணித்த 6 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-ரி1-110)

# வழிப்பறிக் கொள்ளை

யாழ்ப்பாணம்,டிசெ.17

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருவேறு இடங்களில் நேற்றுமுன்தினம் வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

செட்டியார்மடம் வடபகுதியில் பெண் ஒருவரிடம், மோட்டார் சைக்கிளை நிறுத்தி, முகவரி கேட்பதாக பாசங்கு செய்தவர்கள் அவரது கைப்பையைப் பறித்துச் சென்றுள்ளனர்.

வட்டுக்கோட்டை குக்வீதியில் [illegible] கேட்பதுபோல் பாசாங்கு செய்தவர்கள், அதே பாணியில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டனர்.

சம்பவங்கள் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே வேளை, மூளாய் வேரம் பகுதியிலும் வீடு ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் மின்மோட்டர் இயந்திரம் திருடப்பட்டுள்ளது. அது தொடர்பிலும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-4-125)

# மன விரக்தியில் விவசாயிகள்; பயிர்களை அழிக்கும் மாடுகள்

இந்தப் போகத்தில் நெற்பயிர்கள் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளதால், மனவிரக்தியில் சிலர் தமது வளர்ப்பு மாடுகளை வயல்களில் அவிழ்த்துவிட்டுள்ளனர். எனினும் சிலர் விளைந்த பயிர்களையாவது அறுவடை செய்ய முடியும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கும்போது, அவற்றை கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருகின்றன.

இது தொடர்பில் கமக்கார அமைப்புகளுக்கு முறையிட்டபோதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். கைதடி - நாவற்குழி மற்றும் கோயிலாக்கண்டி பிரிவு நெற்செய்கையாளர்கள் இந்தப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். (ஒ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** சந்தோஷமும் நிம்மதியும் குறைவின்றி இருக்கும். குடும்பச் சூழல் சிக்கலின்றி இருக்கும். நிதி நிலை உயரும். இதுவரை இருந்து வந்த தடைகள் மெல்ல விலகும். குழந்தைகள் உங்கள்மீது பாசமாக இருப்பர்.

**இடபம்:** அதிகாரிகளின் அன்பை பெறுவீர்கள். சம்பள உயர்வு உண்டு. கடன் குறையும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நண்பர்களின் எதிர்பாராத சந்திப்பும் ஆதரவும் உண்டு.

**மிதுனம்:** பதவி உயர்வு பற்றிய செய்தி வரும். மகிழ்வான நாள். வாழ்க்கைத் துணையோடு இணக்கமான சூழல் உண்டு. உங்களின் திறமை வேகம் எடுக்கும். அறிவுத்திறன் கூடும்.

**கடகம்:** பலரது உதவிகள் கிடைக்கும். பழைய வருத்தம் மறையும். சுகாதாரமான பழக்க வழக்கங்களைக் கைவிட வேண்டாம். பணியிடத்தில் சில சங்கடங்களைச் சந்திப்பீர்கள். பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**சிம்மம்:** குடும்பத்தினரின் பொறுப்பான செயற்பாடுகள் மகிழ்ச்சி தரும். பேச்சில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரிவடையும். பணம் சேரும். முயற்சியில் இருந்த தடைகள் விலகும்.

**கன்னி:** பணியில் சாதகமான போக்கு நிலவி மகிழ்விக்கும். பழைய கடன்கள் வசூலாகும். குடும்பத்தினரின் உதவி உண்டு. உங்கள் முயற்சியைத் தடுத்தவர் விலகுவார். கோபம் தீரும்.

**துலாம்:** குழந்தைகள் தங்களின் தவறை உணர்வர். மகிழ்ச்சியாகப் பொழுது போகும். சிக்கல் தரும் கோபம் வேண் டாம். பேச்சைக் குறைக்கவும். உங்கள் மனச்சாட்சிப்படி செயற்படுங்கள். குறுக்குவழியை நாட வேண்டாம்.

**விருச்சிகம்:** உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துவீர்கள். சிலருக்கு இடமாற்றம் உறுதியாவதால் மகிழ்ச்சி வரும். வாழ்வில் உயர்வு தரக்கூடிய சந்தோஷமான சந்திப்பு உண்டு.

**தனுசு:** பிறரைக் குறைகூற வேண்டாம். வரவும், செலவும் சமமாயிருக்கும். செலவில் கவனம் தேவை. மனசாட்சியின்படி நடப்பீர்கள். முயற்சியை அதிகரிப்பதால் முன்னேற்றம் உண்டு. மகிழ்ச்சியான நாள்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் சிறு படபடப்புக்குப் பின் வந்து சேரும். சொத்து தொடர்பான விடயத்தில் இருந்த இழுபறி நீங்கும். இடமாற்றம் உண்டாகும். பயணம் ஒன்று மகிழ்ச்சி தரும். வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** சங்கடங்களும் சந்தோஷங்களும் மாறி மாறி இருக்கும். கற்பனை பயம் வேண்டாம். சேமிப்பில் ஆர்வம் உண்டாகும். நிதி, சொத்துப் பற்றி முடிவெடுப்பதில் கவனம் தேவை. பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணையுடன் தேவையற்ற வாக்குவாதம் செய்ய வேண்டாம். படபடப்புதரும் செயல்களை இன்று செய்ய வேண்டாம். கடினம் எடுத்து பெரிய விடயம் எதிலும் ஈடுபட வேண்டாம்.

# இந்தியாவில் அடுத்த மாதம் ஒமிக்ரோன் அலை வீசலாம்

## மருத்துவ நிபுணர்கள் கணிப்பு




**புதுடில்லி, டிசெ.17**

**இந்தியாவில் அடுத்தமாதம் ஒமிக்ரோன் அலை தோன்றும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.**

இதுவரை 61 பேர் ஒமிக்ரோன் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். மகாராஷ்டிரா, ராஜஸ்தான், குஜராத், கர்நாடகா, டெல்லி, கேரளா, ஆந்திரா, சத்தீஸ்கர் ஆகிய 8 மாநிலங்களில் இந்த வைரஸ் பரவியுள்ளது.

இந்த ஒமிக்ரோன் வைரஸ் வேகமாக பரவக்கூடியது என்றும், அதேநேரத்தில் அதிக அளவில் பாதிப்பு இருக்காது என்றும் உலக சுகாதார அமைப்புத் தெரிவித்து இருந்தது.

இந்தியாவிலும் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் ஏற்படத் தொடங்கி விட்டது.

இந்த நிலையில் இந்தியாவில் அடுத்த மாதம் ஒமிக்ரோன் அலை வீச வாய்ப்பு உள்ளது என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஏனெனில் ஒமிக்ரோன் வைரஸின் மாறுபாடு டெல்டா திரிபு பரவும் வேகத்தைவிட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆய்வின்படி தொற்றுநோய் பரவும் தன்மை அதிகமாக இருக்கும் என்றாலும், இந்த வைரஸ் கடுமையான நோயை ஏற்படுத்தாது என்றும் அவர் தெரிவித்துள்ளனர்.

(ச-இ)


## வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி (வ.து) கிளைக்குழுத் தேர்தல் தொடர்பானதும் வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல் தொடர்பான அறிவித்தல்

எமது சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் தொடர்பில் 30.06.2021 வரை வாக்களிக்க தகுதியுள்ள வாக்காளர் பட்டியல்களை இயங்கும் கிளை நிலையங்களிலும் ஏனையவை கிராம சேவையாளர் பிரிவுகளிலும் காட்சிப்படுத்தப்பட்டன. 2022ம் ஆண்டு தை மாதம் அளவில் கிளைக்குழு தேர்தல்கள் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால் 31.12.2021 வரை வாக்களிக்க தகுதியுள்ள வாக்காளர் பட்டியல்களை இயங்கும் கிளைகளை அந்தந்த கிளைநிலையங்களிலும் இயங்காத கிளைகளின் வாக்காளர் பட்டியல்களை சங்கத்தின் தலைமைக் காரியாலத்திலும் 31.12.2021 வரை காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. இப் பட்டியல் உள்ள பெயர் விபரங்கள் தொடர்பான ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் 31.12.2021ந் திகதிக்கு முன் செயலாளர் வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி பருத்தித்துறை வீதி புத்தூர் என்னும் முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு** - ஏதேனும் ஆட்சேபனைகள் கிடைக்கப்பெறாத விடத்து காட்சிப்படுத்தப்பட்ட பட்டியல் சரியென்ற அடிப்படையில் கிளைக்குழுத் தெரிவுகள் நடத்தப்படும்.

**தலைவர்** **17.12.2021** **செயலாளர்**

(CR 5794) 1-6


# முப்படைத் தளபதிகள் குழுவின் தலைவராக எம்.எம். நரவனே



புதுடில்லி, டிசெ.17

முப்படைத் தளபதிகள் குழுவின் தலைவராக மனோஜ் முகுந்த் நரவனே நியமிக்கப்பட்டுள்ளார். நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே காட்டேரிப் பகுதியில் கடந்த 8ஆம் திகதி இராணுவ ஹெலிகொப்டர் விபத்துள்ளானது. இதில் ஹெலிகொப்டரில் பயணம் செய்த முப்படை தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி உட்பட 14 பேர் உயிரிழந்தனர். பிபின் ராவத் உயிரிழந்ததையடுத்து புதிய முப்படைத் தளபதியை தேர்வு செய்யும் பணியில் மத்திய அரசு தீவிரமாக ஆலோசித்து வருகின்றது. இந்த நிலையில், முப்படைத் தளபதிகள் குழுவின் தலைவராக இராணுவ தளபதி மனோஜ் முகுந்த் நரவனே நியமிக்கப்பட்டுள்ளார். முப்படைகளின் தலைமைத் தளபதி தேர்வு செய்யப்படும்வரை குழுவின் தலைவராக நரவனே செயற்படுவார் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

(ச-இ)


## தேவை

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள கணிய அளவையாளர்(Q.S) தேவை. AutoCAD தெரிந்தவர் விரும்பத்தக்கது. மற்றும் அலுவலக உதவியாளர் (A/L தகைமை) தேவை.

தொ.இல:- 076 316 5734

E-mail:jenoshanark@gmail.com

(CS 900) 1-6



## மரண அறிவித்தல்



### தனிநாயகம் இலட்சுமி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் விநாயகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தனிநாயகம் இலட்சுமி அவர்கள் 16.12.2021 காலமானார்.

அன்னார் அமரர் தனிநாயகம் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்புத் துணைவியாரும், அமரர்களான கந்தப்பு, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகளும், அமரர்களான அம்பலவாணர், கற்பகம், அகியோரின் மருமகளும், கோபாலசிங்கம், குணசிங்கம், தருமரட்ணம், கோவிந்தபிள்ளை, குணவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலைச்செல்வி, அமரர் கலைச்செல்வன், அருட்செல்வி, தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியசீலன், தயாகரன், புவிநாயகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர்களான குமாரவேலு, மருதலிங்கம், மற்றும் தருமரட்ணம், மயில்வாகனம், வரதராசா, அமிர்தலிங்கம் பேரம்பலம், புண்ணியமூர்த்தி, ஜெயலட்சுமி, வேதநாயகி, அமரர் கனகேஸ்வரி, கோமளம், நல்லம்மா, அமரர் தருமலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், செந்தூரன், யோஜிதா, அமரர் ஆரூரன், ஆரண்யன், சுடரோன், கலைச்சுடர், கதிரவன், கணிவிழி, பிரணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆரபி, அஸ்விகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் விநாயகபுரம் அன்னாரின் இல்லத்தில் இன்று (17.12.2021) முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

(CR 5793) 1-6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.கவிதா
விவசாயப் போதனாசிரியர்
விவசாயத் திணைக்களம், நல்லூர்.



# நெற் கதிர்களில் நோய்த் தொற்று

## கட்டுப்படுத்தலும் முகாமைத்துவம் செய்தலும்



யாழ். மாவட்டத்தில் காலபோகத்தில் மழைநீரை நம்பி விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த வருடம் காலபோகத்தில் தொடர்ச்சியான மழைவீழ்ச்சி காரணமாக நோய்த்தாக்கம் பரவலாகக் காணப்படுகின்றது.

எனவே காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப பொருத்தமான பயிராக்கவியல் நுட்பங்களையும், நோய்கள் தொடர்பான கட்டுப்பாட்டு முறைகளையும் விவசாயிகள் கடைப்பிடிப்பது முக்கியமானதாகும். தற்போது நெல் வயல்களில் இலைமடல் வெளிறல் நோய், எரிபந்தம் நோய் ஆகியவற்றின் தாக்கங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. விவசாயிகள் பின்வரும் கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

### இலை மடல் வெளிறல் நோய்

ரைசொக்ரோனியா சொலனை (Rhizoctonia Solanai) பங்கசுவே நோய்க்காரணியாகும். மப்பும் மந்தாரமுமான காலநிலை நோய் விருத்தியாவதற்குச் சாதகமாகக் காணப்படுகின்றது. உச்சமட்டம் வெடிக்கும் பருவத்தில் பாதிப்படையக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

இலையிலும், இலைமடலிலும் ஒழுங்கற்ற பச்சை கலந்த நரைநிறப்புள்ளிகள் உள்ளதா என அவதானித்தல் வேண்டும். நோய்க்குச் சாதகமான காலநிலையில் கபிலநிற கடுகுபோன்ற பூஞ்சண உறங்கு நிலை (கிளிரோசியா) அமைப்பு இலைகளில் காணப்படும்.

பரிந்துரை செய்யப்பட்ட பங்கசு நாசினியை நோய் அறிகுறிகள் ஆரம்பத்தில் தென்படும் இடங்களில் மட்டும் தெளித்தல் வேண்டும். 10 வீதத்துக்கு அதிகமாக இலைகளில் நோய்தாக்கத்துக்கு உள்ளாகி இருப்பின் பங்கசு நாசினியைப் பயன்படுத்தவும்.

### பயிராக்கவியல் கட்டுப்பாடுகள்

- பரிந்துரை செய்யப்பட்ட விதை நெல்லையும், உரங்களையும் பயன்படுத்தல்.
- ஏக்கருக்கு 2.5 புசல் விதைநெல்.
- புற்களை வயல்களில் அவதானித்து உரிய வேளையில் களைநாசினியைப் பயன்படுத்தல், கைகளால் பிடுங்கி அகற்றல்.

### நேரடிக் கட்டுப்பாடுகள்

- பென்சிக் குயுரோன் 25%WP பிரயோகஅளவு 128 கிராம் - 160 கிராம் வரை ஏக்கருக்கு ஐதாக்கல் அளவு 32 கிராம் 16 லீற்றர் நீர்.
- தயோபினேற் மீதாயில் (றொப்சின்) 75% WP பிரயோகஅளவு 256கிராம் - 320 கிராம் ஏக்கருக்கு ஐதாக்கல் அளவு 16 கிராம் 16லீற்றர் நீர்.
- றெபியுகொனசோல் (பொலிகர்) 250g/1EW பிரயோக அளவு 76 கிராம் - 96 கிராம் ஏக்கருக்கு ஐதாக்கல் அளவு 9.6 மி.லீற்றர் 16 லீற்றர் நீர்
- புறப்பிகொனோசோல் (ரில்ற்) 250g/EC பிரயோக அளவு 128 கிராம் - 320 கிராம் ஏக்கருக்கு ஐதாக்கல் அளவு 16 மி.லீற்றர் 16லீற்றர் நீர்
- புளுட்டோனில் 50%WP பிரயோக அளவு 360 கிராம் - 520 கிராம் ஏக்கருக்கு ஐதாக்கல் அளவு 32 கிராம் 16 லீற்றர் நீர்

### எரிபந்தம் நோய் (Blast)

நெல்லில் ஏற்படும் நோய்களில் எரிபந்தம் மிகவும் பரவலாகக் காணப்படுவதுடன் கூடிய பாதிப்பை ஏற்படுத்தும். எந்தவொரு வளர்ச்சிப் பருவத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும். பைரிகுளேரியாகிரைசியா (Pyriculariagrisea) பங்கசுவே நோய்க் காரணியாகும்.

### நோய் அறிகுறியும் கண்காணித்தலும்

குறைந்த இரவு வெப்பநிலை, காலையில் நிலவும் பனிநோய் விருத்தியாவதற்கு சாதகமாகக் காணப்படுகின்றது.

கண்போன்ற புள்ளிகள் இலையில் காணப்படும். புள்ளியின் நடுப்பகுதியில் நரைநிறம் அல்லது வெண்ணிறமாகத் தோன்றும்.

இறந்த மற்றும் கறுப்பு நிறமான கணுவிடைகள் இடையிடையே முறிந்து காணப்படும்.

தொற்றிய வெள்ளைக் கதிர்களையும் கழுத்துப் பகுதியில் கபில அல்லது கறுப்பு நிறத்தையும் அவதானிக்கலாம்.

சேத அறிகுறிகள் விருந்து வழங்கித் தாவரங்களான புற்கள், தானியங்களில் காணப்படும்.

10 வீதத்துக்கு அதிகமான இலைகள் நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகி இருப்பின் பரிந்துரை செய்யப்பட்ட பங்கசு நாசினியைப் பயன்படுத்தவும்.

### பயிராக்கவியல் கட்டுப்பாடுகள்

பரிந்துரை செய்யப்பட்ட விதை நெல்லையும், உரங்களையும் பயன்படுத்தல்.

விருந்து வழங்கித் தாவரமான புற்களை வயல்களில் அவதானித்து உரியவேளையில் களைநாசினியைப் பயன்படுத்தல், கைகளால் பிடுங்கிஅகற்றல்.

### நேரடிக் கட்டுப்பாடுகள்

- காபன்டைசிம் 50% WG பிரயோகஅளவு 90 கிராம் - 110 கிராம் வரை ஏக்கருக்கு ஐதாக்கல் அளவு11.2கிராம் 16 லீற்றர் நீர்
- காபன்டைசிம் 500g/18L பிரயோக அளவு 90 கிராம் - 110 கிராம் ஏக்கருக்கு ஐதாக்கல் அளவு 9.6 மி.லீற்றர் 16 லீற்றர் நீர்
- ஐசோபுரோதியோயேன் 400g/EC பிரயோக அளவு160 மி.லீற்றர் -200மி.லீற்றர் ஏக்கருக்கு ஐதாக்கல் அளவு 20 மி.லீற்றர் 16 லீற்றர் நீர்
- றெபியுகொனசோல் (பொலிகர்) 400g/EC பிரயோக அளவு 77 மி.லீற்றர் - 96 மி.லீற்றர் ஏக்க ருக்கு ஐதாக்கல் அளவு 9.6 மி.லீற்றர் 16 லீற்றர் நீர்.
- ரைசைக்கிளசோல் (குரு) 75%WP பிரயோக அளவு 76 கிராம் - 96 கிராம் ஏக்கருக்கு ஐதாக்கல் அளவு 9.6கிராம் 16 லீற்றர் நீர்

# நிரந்தர நியமனம் கோரி வடக்கு ஆளுநருக்கு மனு

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ். மாநகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள், நிரந்தர நியமனம் வழங்கக்கோரி, வடக்கு மாகாண ஆளுநரிடம் நேற்று மனு கையளித்தனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2019 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை யாழ்.மாநகரசபையில் சுகாதாரப் பகுதியில் கடமை புரியும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தொழிற் சங்கம், ஆணையாளருடன் கலந்துரையாடியது. 2019ஆம் ஆண்டு 59 ஊழியர்களுக்கு ஆளுநரின் அனுமதி கிடைக்கப் பெற்றால், நிரந்தர நியமனம் வழங்கலாம் என்று கூறி, கடிதமும் தரப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு தொழிலாளர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தியபோது, அப்போதைய ஆளுநர் தற்காலிக ஊழியர்களுக்கு 3 மாதத்துக்குள் நிரந்தர நியமனம் வழங்க வாய்ப்பு அளிப்பேன் - என்றார். இதுவரையும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது மாநகரசபையில் 89 நிரந்தர நியமனங்களுக்கான வெற்றிடங்கள் உண்டு. எனவே 110 சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கும் நிரந்தர நியமனம் [illegible] தர நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஒ-4-125)

# வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு



கிளிநொச்சி,டிசெ.17

வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு செயற்றிட்டம், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி 'லிட்டில் எய்ட்' திறன் விருத்தி மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில், கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டதுடன், துண்டுப் பிரசுரமும் விநியோ கிக்கப்பட்டது. சாரதிகள் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்துதல், பாதசாரிக் கடவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், வேகக் கட்டுப்பாட்டைப் பேணுதல் உள்ளிட்ட விடயங்கள் இதன் போது வலியுறுத்தப்பட்டன. (ஒ-4-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதான நீதிவான்

யாழ்ப்பாணம், டிசெ. 17

ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளரான சிவசிதம்பரம் நற்குணலிங்கம், சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கர் முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் நெல்லியடி முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் மூத்த உறுப்பினரும், நெல்லியடி சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் இணைப்பாளரும், நெல்லியடி சனசமூக நிலையப் போஷகரும், கரவெட்டி மத்தியஸ்த சபைத் தவிசாளரும் ஆவார். (ம)


## ஏல விற்பனை

**பழைய கம்பிகள், தகரங்கள், இரும்புகள், கணினிகள்** என்பன விற்பனைக்குண்டு. தங்களுடைய விலைக்கோரல் பட்டியலை 28.12.2021 இற்கு முன்னர் **தபாலிலோ / நேரிலோ** அனுப்பிவைக்கவும்.

**பார்வை நேரம்: முற்பகல் 10.00 மணி - 12.00 மணிவரை**

**நொதேண் சென்றல் வைத்தியசாலை**
**இல.342, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

(cr.36739) (2.6)


## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) இறைச்சிக்கடை குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் 2022

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி :- 17.12.2021 வெள்ளிகிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும இறுதித் திகதி :- 24.12.2021 வெள்ளிகிழமை பி .ப 02.00 மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 24.12.2021 வெள்ளிகிழமை பி .ப 02.30 மணி

| இல | குத்தகைவிபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | இறால்மடம் சந்தை கோழிஇறைச்சிக் கடை | 1,250.00 | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |

➤ மேலதிக விபரங்களை 2021.10.22 ஆம் திகதிய பத்திரிக்கையில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கேள்வி அறிவித்தல் 2022 விளம்பரத்தை பார்வையிடவும்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.**
**தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை.**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி).**

**17.12.2021**

(CR 36743) (3/6)


## கண்ணீர் காணிக்கை



அமரர் கலாநிதி
**கனகசபாபதி நாகேஸ்வரன்**
(மரபுவழி அறங்காவலர், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில்.
மொழித்துறை பேராசிரியர் (ஓய்வுநிலை)
சப்ரகமுவ பல்கலைக்கழகம்)

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீநாகபூசணி நகைதயாரிப்பாளர்**
**இல.671/1, கே.கே.எஸ். வீதி, பூநாறிமரத்தடி, யாழ்ப்பாணம்.**

(cs.41684) (2.6)


## INVITATION FOR BID (IFB)
## Provincial High Court Northern Province Jaffna
## Procurement of Cleaning and Sanitary Services – 2022

01. **The Chairman, High Court Procurement Committee, Northern Province Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders, **who have at least service station or branch in Jaffna District,** for the **service mentioned below in the schedule.**
02. Bidding will be conducted through National Competitive Bidding (NCB).
03. Interested bidders may obtain further information from the **Procurement Unit, Provincial High Court, Jaffna** (Financial Branch) and inspect the Bidding Documents at the same address on any working day from **9.00 a.m to 2.00 p.m from 17.12.2021**
    Contact numbers are
    Phone : 021 222 2582 / 021 222 6388
    Facsimile : 021 222 2582 / 021 222 6388
04. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on submission of a written application to the **Procurement Unit, Provincial High Court, Jaffna from 17.12.2021 to 11.01.2022 from, 9.00 a.m to 3.00 p.m** upon the payment of a non- refundable fee as described in the schedule below.
05. Sealed bids shall be sent by registered post addressed to the **The Chairman, High Court Procurement Committee, Northern Province Jaffna** or deposited in the Tender Box available at the Procurement Unit, High Court Jaffna on or before **12.01.2022 2.00 p.m.** Late bids will be rejected. Bidders should write the **service description** and **bid No.** on the top left hand corner of the envelope. Bids will be opened at **2.00 p.m. on the same day** in the presence of the bidders or bidders' representatives who choose to attend. Original and duplicate should be submitted separately for each Court.
06. Bid shall be valid for a period of **77 days** from the last date (12.01.2022) fixed for receiving of Bids or any extended period & bid security should be valid for **105 days** from the bid opening.
07. Procurement Committee will keep the right to make final decision about accept or reject Bids and it will be the final decision regarding the bids.
08. The details of the bids are given overleaf:

| S.No | Bid ID. | Description of Service | Estimated Amount (million) (Excluding VAT) | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (Rs.) | Vaild Period Until | |
| 01 | HCJ/PROC/Serv. (Clean)/01/01/2021 | Cleaning Service for Courts Complex Jaffna | 3.4 | 25000/- | 27.04.2022 | 1500/- |
| 02 | HCJ/PROC/Serv. (Clean)/02/01/2021 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Mallakam | 2.9 | 25000/- | 27.04.2022 | 1500/- |
| 03 | HCJ/PROC/Serv. (Clean)/03/01/2021 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Point Pedro | 2.2 | 25000/- | 27.04.2022 | 1500/- |
| 04 | HCJ/PROC/Serv. (Clean)/04/01/2021 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Chavakachchery | 2.4 | 25000/- | 27.04.2022 | 1500/- |
| 05 | HCJ/PROC/Serv. (Clean)/05/01/2021 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Kayts | 2.4 | 25000/- | 27.04.2022 | 1500/- |
| 06 | HCJ/PROC/Serv. (Clean)/06/01/2021 | Cleaning Service for Juvenile Magistrate's Court Jaffna | 1 | 25000/- | 27.04.2022 | 1500/- |

09. Pre bid meeting will be held at Provincial High Court Jaffna, on **04.01.2022 at 2.00 p.m.**

**The Chairman,**
**High Court Procurement Committee**
**Provincial High Court Northern Province Jaffna.**

(cr.36735) (2.6)

## பருத்தித்துறை அரச கால்நடை வைத்திய அலுவலகம் தற்காலிகமாக இயங்கு வதற்குரிய கட்டடம் வாடகைக்குப் பெறுதல்

கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொலண்டதாக அமைதல் வேண்டும்.

1. தற்போதைய அலுவலகத்திலிருந்து 1 கிலோமீற்றர் தூரத்திற்குள் பிரதான வீதிக்கு அருகில் இருத்தல் வேண்டும்.
2. அலுவலகம் நடாத்தக் கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.
3. அண்ணளவாக கட்டடம் 1600 சதுர அடி பரப்பளவைக் கொண்டதாக இருத்தல்
4. கட்டடம் ஒரு வருட காலத்திற்கு வழங்கப்பட வேண்டும்.
5. குடிநீர், மின்சாரம் மற்றும் மலசலகூட வசதி இருத்தல் வேண்டும்.
6. பண்ணையாளர், வாகனம் இலகுவாக வரக்கூடிய பாதை இருத்தல் வேண்டும்.
7. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் வாடகையே வழங்கப்படும்.
8. முற்பணம் வழங்கப்படமாட்டாது.

07 நாட்களுக்குள் (24.12.2021 இற்கு முன்னர்) அலுவலக நாட்களில் கால்நடை வைத்திய அதிகாரி, கால்நடை வைத்திய அலுவலகம் பருத்தித்துறையில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**கால்நடை வைத்திய அதிகாரி,**
**பருத்தித்துறை**

**தொலைபேசி இலக்கம் :**
**0212263270**

(CS 5791) 1/6


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
01 . 02 . 1947



மறைவு
17 . 11 . 2021

கடந்த (17.11.2021) புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**முத்தையா சிவசுப்பிரமணியம்**
(யாழ்: நெல்லியடி நாதஸ்வர வித்துவான்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.12.2021) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, அதனை தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**முருக மூர்த்தி வீதி,**
**நெல்லியடி,**
**கரவெட்டி.** (cs.893) (2.6)

**குடும்பத்தினர்**
**077 905 8615**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடன் மீளாய்வுக்கு உட்படுத்துக!

## ஐ.நா. அறிக்கையாளர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, டிசெ. 17
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக மீளாய்வுக்கு உட்படுத்தி, அதன் பாதகமான சரத்துக்களைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் பொறிமுறையின்கீழ் மனித உரிமைகளுக்கு உரியவாறு மதிப்பளிக்கப்படுவதுடன் அவை பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் 7 விசேட அறிக்கையாளர்கள் கூட்டாக இணைந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் வரையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பயன்பாட்டை இடைநிறுத்துமாறும் அந்தக் கடிதத்தில் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைப்பதற்கு முன்னெடுக்கப்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் உங்களுடைய அரசால் வழங்கப்படும் தெளிவுபடுத்தலை வரவேற்கின்றோம். அதேவேளை மிகுந்த கரிசனைகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் காணப்படும் சரத்துக்கள் தொடர்பில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தமையினை நினைவுறுத்துவதுடன் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக அதனை உடனடியாக மீளாய்வு செய்யவேண்டியதன் அவசியத்தை உங்களது அரசுக்கு மீளவலியுறுத்துகின்றோம்.

கடந்த காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா. விசேட அறிக்கையாளர்கள் சிலர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களை சீர்செய்வதற்கான பரிந்துரைகளை உங்களுடைய அரசிடம் முன்வைத்திருந்தனர். இருப்பினும் அந்தப் பரிந்துரைகள் செயற்படுத்தப்படாததுடன் மாத்திரமின்றி உரிமைகள் மேலும் மறுக்கப்படக்கூடியவாறான நடைமுறைகள் உள்வாங்கப்பட்டமை கவலையளிக்கின்றது - என்றுள்ளது. (ம)


# வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2022

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடையினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி** :- **17.12.2021 தொடக்கம் 30.12.2021 பிற்பகல் 12.30 மணிவரை**
**கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி** :- **30.12.2021 வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணிவரை**
**கேள்விப் பத்திரம்திறந்து பரிசீலிக்கப்படும் திகதி** :- **30.12.2021 வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணி**

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 30.12.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ,யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

01. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
02. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
03. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
04. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ / நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. இவ் வியாபார நிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேசசபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.
06. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கைதுணை அல்லது அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவர்.
07. கடை கட்டடத்தில் புனரமைப்புவேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
08. சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்க முடியும்.
09. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் அதற்குரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம்/ தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
10. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேசசபைக்கு செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப்பணம் எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச்செய்யப்படமாட்டாது.
11. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
12. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன், கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
13. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் தண்டப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
14. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/தகவல்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் நேரடியாகவோ அல்லது 0212241130 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த கேள்வித்தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்விவைப்பு மீளளிக்கக்கூடியது |
|---|---|---|---|---|
| தெல்லிப்பளை – முதலாம்மாடி | | | | |
| கடை இல 2 | 907 | 2,640,000.00 | 2000.00 | 275,000.00 |

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்**
**உள்ளூராட்சி [illegible] சபை**
**வலிகாமம் வடக்குப்பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**

**17.12.2021** (CR 36741) (3/6)


இரசாயனவியல் ஆராய்ச்சி

## ஆய்வறிக்கைப் போட்டியில் யாழ்.பல்கலை மாணவன் முதலிடம்



யாழ்ப்பாணம், டிசெ. 17
இறுதிவருட மாணவர்களுக்கான சிறந்த இரசாயனவியல் ஆராய்ச்சி ஆய்வறிக்கைப் போட்டியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் சிந்தக்க தென்னக்கோன் முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

பிரிட்டனிலுள்ள இரசாயனவியலுக்கான றோயல் கழகத்தின் இலங்கைப் பிரிவு இந்த ஆராய்ச்சிப் போட்டியை இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் நான்காம் வருட இரசாயனவியல் சிறப்பு பட்டப்படிப்பு மாணவர்களுக்கிடையில் நடத்தியது. குறித்த மாணவன், இந்த தங்கப்பதக்கத்தை றோயல் கழகத்தின் இலங்கைப் பிரிவின் முன்னாள் தலைவரும் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தருமான பேராசிரியர் சுசந்த லியனகேயிடமிருந்து கடந்த 12ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பெற்றுக்கொண்டார்.

இந்த ஆராய்ச்சியானது பிரதம ஆராய்ச்சியாளரும் இணைப்பாளருமான பௌதிகவியல் துறையைச் சார்ந்த பேராசிரியர் கந்தசாமி விக்னரூபன் மற்றும் இரசாயனவியல் துறையைச் சார்ந்த பேராசிரியர் குகமூர்த்தி வேலாயுதமூர்த்தி, கலாநிதி கணேசலிங்கம் சசிகேஸ் ஆகியோரின் வழிகாட்டலின்கீழ் விஞ்ஞானபீடத்தின் பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல் துறைகளில் புதிதாக மறுசீரமைக்கப்பட்ட ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்டது. (கு)

### 24 மணித்தியாலங்களில்....

அதுமட்டுமன்றி, கடந்த முதலாம் திகதி தொடக்கம் நேற்று வரையான 45 நாள்களில் மாத்திரம் 752 எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வெடிப்புச் சம்பவங்களில் 90 சதவீதமானவை எரிவாயு அடுப்புக்களில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏசியன் தளபாட நிலையத்தின் புதிய கிளை திறப்பு விழாவை முன்னிட்டு

## நத்தார் பண்டிகை மாபெரும் விலைக்கழிவு

**Electronic & Furniture**

**washing machine (innovex) 5year warranty**



| | | | |
|---|---|---|---|
| Fully Automatic | (6 kg) | ~~55250~~/- | 40200/- |
| | (7 kg) | ~~61560~~/- | 45100/- |
| Semi Automatic | (6.5 kg) | ~~37560~~/- | 29500/- |

**Fridge (innovex) 10 year warranty**



| | | | |
|---|---|---|---|
| Single Door | 180 Ltr | ~~61000~~/- | 44990/- |
| Double Door | 180 Ltr | ~~65800~~/- | 48150/- |
| | 240 Ltr | ~~70000~~/- | 52100/- |
| | 250 Ltr | ~~85000~~/- | 63900/- |
| Inverter | 250 Ltr | ~~92900~~/- | 69450/- |

**Television (innovex) 3 year warranty**



| | | |
|---|---|---|
| 32 ``LED TV | ~~45000~~/- | 36150/- |
| 40" LED TV | ~~79000~~/- | 62950/- |

**Piyestra**



Matters (Piyestra)

| | | |
|---|---|---|
| Single (D/L) 6 x 3 | ~~5400~~/- | 3850/- |
| Double (D/L) 6 x 4 | ~~7050~~/- | 4970/- |



**Plastic Verandah Chair (Piyestra)**
(6 Chair + Teapow) ~~10100~~/- 8100/-

**Sofa3 + 1 + 1 (warranty Rexin - 2years Body - 10 Years** ~~60800~~ 49000/-

Piyestra sofa's and Office Furnitures 15% Discount
Piyestra Bedroom Suits 12.5% Discount

INNOVEX Piyestra Nilkamal Panasonic Hisense DAXER

114, Navalar Road,
Jaffna.
021 222 6898



## பெயர் மாற்றம்

அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பில் வசிக்கும் **நாகேந்திரராசா துவாரகன்** ஆகிய நான் எனது பெயரை இன்று தொடக்கம் **நாகேந்திரராஜா துவாகரன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **நாகேந்திரராஜா துவாகரன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**நாகேந்திரராஜா துவாகரன்**

(cs.41670) (4.6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
12 . 06 . 1944

மறைவு
17 . 11 . 2021

### அமரர் தம்பிப்பிள்ளை குலேந்திரன்

*திதி : திரயோதசி*

எம்மை பிரிந்தாலும்
என்றென்றும் எம் உள்ளத்தில்
இருந்து நெறிப்படுத்தும் தந்தையே
உங்களை அன்புடனும்
நன்றியுடனும்
நினைவு கூருகின்றோம்.

**குடும்பத்தினர்**

(cs.41674) (2.6)

## நன்றி நவிலல்



கடந்த 17.11.2021 அன்று அமரத்துவமடைந்த
எமது குடும்பத்தலைவர்


### அமரர் முத்துராசா இரவீந்திரன்

அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதிலிருந்து அவர் அமரத்துவமடையும் வரை அவருக்குச் சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் உதவிகளைப் புரிந்த வைத்தியசாலை அலுவலர்கள், அவர் நோயுற்றிருந்த காலத்தில் அவரிற்கும் எமக்கும் உறுதுணையாய் இருந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி சமூகத்தினர், பழைய மாணவர்கள், கிளிநொச்சி அதிபர் சங்கத்தினர், அவர் அமரத்து வமடைந்த பிற்பாடு பக்கபலமாய் எமது துயரில் பங்குற்று உதவிகளை ஆற்றி இறுதி நிகழ்வில் கலந்து இரங்கல் உரைகளை வழங்கி, உள்நாடு மற்றும் வெளிநாடுகளி லிருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு துயர் பகிர்ந்தோருக்கும், இணையவழி ஊடான நினைவுபகிர்வினை ஒழுங்கமைத்த கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிலையம் மற்றும் கிளி மாவட்ட மக்கள் அமைப்பினரிற்கும்.மேலும் பல்வேறு வழிகளிலும் தோளோடு தோள் நின்று உதவியதுடன் மரணச் சடங்கில் கலந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

(cs.41609) (2.6)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் கலாநிதி

### கனகசபாபதி நாகேஸ்வரன்

(மரபுவழி அறங்காவலர், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில்
மொழித்துறை பேராசிரியர் (ஓய்வுநிலை) சப்ரகமுவ பல்கலைக்கழகம்.)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலின் மரபுவழி அறங்காவலரும், ஓய்வுநிலை மொழித்துறைப் பேராசிரியருமாகிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருவடிகளைச் சென்றடையப் பிரார்த்திக் கின்றோம்.

**பிரிவால் துயருறும்:**

**அறங்காவலர் சபையினர் - வவுனியா கோவில்குளம்**
**அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரர் சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில், ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி அருளக சிறுவர் இல்லம், சிவன் முதியோர் இல்லம்**

(cs.00937) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் வளாகத்தைச் சுற்றியுள்ள வெள்ளநீர் அகற்றும் நடவடிக்கை அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர், சீடா நிறுவனப் பணியாளர்களுடன் தொடர்பு கொண்டமைக்கு அமைவாக சீடா நிறுவனத்தின் பவுசர் மூலம் வெள்ளத்தை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ய-159)

## Faculty of Arts, University of Jaffna
## Request for Expression of Interest (EOI)

**Assignment Title: Visiting Lecturer in Postgraduate Diploma in Education Programme**

Expression of Interest is invited from the eminent scholars who fulfill the following requirements to undertake the position as Visiting Lecturer to teach in Postgraduate Diploma in Education Programme. The Faculty of Arts wishes to keep a record of a pool of Visiting Lecturers.

**Education Qualifications:** M.Phil in Education or above from the recognized University (approved by the UGC)

**Experience:** 05 years in teaching profession

Those who are interested shall send their expression of interest to the Dean, Faculty of Arts, University of Jaffna along with curriculum vitae(CV) and supporting documents related to educational qualifications and teaching experience by registered post on or before 22nd December 2021.

Candidates are expected to mention the field of specialization which can be taught by them in the Postgraduate Diploma in Education Programme, in the CV.

Registrar
University of Jaffna

(CR 36742) (3-6)

# சேவை நலன் பாராட்டு



திருமதி மஞ்சுளாதேவி குமாரதேவன்
ஓய்வுபெற்ற ஆசிரியர் : ஆங்கிலம்
இலங்கை ஆசிரியர் சேவை-தரம் -2 II

சேவை விபரம்

யா/குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம் - 29.07.2005 - 12.09.2005
யா/ஏழாலை சைவமகாவித்தியாலயம் - 13.09.2005 - 23.11.2008
யா/குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம் 24.11.2008 - 30.09.2013
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி - 01.10.2013 - 20.04.2020

எழில் கொஞ்சும் யாழ்ப்பாணத்தில் குப்பிளான் கிராமமதில்
ஏற்றம் பெற்று வாழ்ந்த மகாலிங்கமும் திருமலர்தேவியும் செய்த
தவப்பயனாய் வந்துதித்த மங்சுளா தேவியாள்
தளிர்நடை பயின்று கல்வியில் சிறந்து
தரணியில் நல்லாசானாய் மிளிர்ந்துமே நின்றாள்
கல்விக்கடலில் முத்தெடுத்தே
கவினுறவே நன்னெறிகள் பல பயின்று
காலத்தின் தேவை மிகுவுணர்ந்தே
ஆங்கிலத் துறையைத் தேர்ந்தெடுத்தே
ஆர்வத்தோடு அத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுமே
ஆனந்தமாக மாணவர் உலகோடு
களிநடம் புரந்துமே நின்றாள்
அன்பும் அடக்கமும் தன் குணமாய்க் கொண்டு
அனைவரையும் ஒன்றாய் அரவணைத்தே
ஆசிரியர் குழாத்துடன் இணக்கமாய் நின்று
ஆளுமை மிக்க கற்பித்தற் திறனாலே
மாணவர் மனங்களில் நீங்கா இடத்தை
நித்தியமாகவே பெற்றுமே நின்ற நங்கை நல்லாள்
ஓய்வு காலமதில் ஆரோக்கியத்தோடு நலமாக வாழ
இறையருளை இறைஞ்சியே நிற்கிறோம்.



கல்லூரிச் சமூகம்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

# கண்ணீர் அஞ்சலி



இரணைப்பாலை, புதுக்குடியிருப்பை
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## வீரசிங்கம் ஸ்ரலின் ஜெயசிங்கம்
## (கணினி வடிவமைப்பாளர்)

நேற்று (16.12.2021) வியாழக்கிழமை
அகாலமரணமடைந்த வீரசிங்கம் ஸ்ரலின்
ஜெயசிங்கம் (கணினி வடிவமைப்பாளர்)
அவர்களின் அகால மரணச் செய்தியறிந்து
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**பிரிவால் துயருறும்**
**பணிப்பாளரும், பணியாளர்களும்**
**கரிகணன் (தனியார்) நிறுவனம்**
**இல.672B, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பிறப்பு : 15.10.1990 இறப்பு : 16.12.2021

(CS 41614) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரவுகிறது....

குறித்த மூன்று தொற்றாளர்களும் நாட்டில் எந்தப் பகுதியில் உள்ளனர்? மக்களுடன் மக்களாகக் கலந்து நடமாடுகின்றனரா என்பது பற்றிய எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை என்ற அதிர்ச்சித் தகவலும் கூறப்பட்டுள்ளது.

பண்டிகைக்காலத்தில் ஒமிக்ரோன் தொற்று பரவலடையும் என்று சுமார் 2 வாரங்களுக்கு முன்னரே மருத்துவ அதிகாரிகள் சங்கமும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கமும் எதிர்வுகூறியிருந்தநிலையில், தொற்று எண்ணிக்கை நேற்று 4 ஆக உயர்ந்தது.

"எதிர்பார்த்தபடி, ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆகையால், உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள் இன்றைய நிலைவரப்படி, எங்கள் ஆய்வகத்திலிருந்தான முடிவுகளின்படி நால்வருக்கு ஒமிக்ரோன் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்றும் சந்திம ஜீவந்தர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை,

நாட்டில் நேற்று அடையாளம் காணப்பட்ட ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் வெளிநாட்டவர். அவர் தற்போது நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். மற்றையவர் இலங்கையர். மூன்றாவது நபர் அவருடன் தொடர்பு பேணியவர். இவர்களைப் பற்றி இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இவர்கள் தொடர்பான தகவல்களை விசாரித்து வருகிறோம். நாட்டில் முதலாவதாக அடையாளம் காணப்பட்ட நோயாளி தனி நோயாளியாக இருந்தார். ஆனால், இப்போது 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். விமான நிலையத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளினூடாகவே இவர்களில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எந்தெந்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள என்பது இதுவரையில் தெளிவாகத் தெரியவில்லை. சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று வெளிநாட்டுக்கு சென்றவருடன் தொடர்பைப் பேணியவர்களை அடையாளம் காணும் செயற்பாடுகளை தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவு மேற்கொண்டுவருகின்றது - என்று மேலும் தெரிவித்தார்.

**77 நாடுகளுக்கு பரவியது**

அதுமட்டுமன்றி, முன்னெப்போதும் இல்லாத அளவில் ஒமிக்ரோன் உலகம் முழுவதும் பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. இதுவரை 77 நாடுகளில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தத் தொற்று இன்னும் பலரிடம் இருக்கலாமென உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் எச்சரித்துள்ளார். அத்துடன், மாறுபாட்டைச் சமாளிக்க போதுமான அளவு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார். (த-இ)

## அமெரிக்கத்....

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டங்கள் ஆகியவை பற்றி, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தூதுக்குழு, அமெரிக்கத் தூதுவரை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியது.

புதிய வருடத்தில் அமெரிக்காவிலிருந்து அரசாங்க பிரமுகர்கள், அதிகாரிகள் இலங்கை வர உள்ளனர். அவர்கள் த.மு.கூ. உட்பட இலங்கையின் அனைத்துத் தரப்பினரையும் சந்திக்க ஆவலாக உள்ளனர் என்று அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

அதேபோல், அமெரிக்காவுக்கு வந்து இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளைச் சந்திக்கும்படியும் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசனுக்கு அமெரிக்கத் தூதர் அழைப்பு விடுத்தார்.

தற்போதைய தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் கூட்டுச் செயற்பாட்டின் பின்னர், தேசிய, இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பொதுக் கோரிக்கைகள், யோசனைகள் அடங்கிய ஆவணத்துடன் நாம் சர்வதேச அரங்குகளில் சர்வதேச சமூகத்தை காத்திரமாக எதிர்கொள்வோம் என்று, தூதுவரிடம் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, அமெரிக்கத் தரப்பில் பதில் தூதுவர் மார்ட்டின் கெலி, பதில் துணைத் தூதுவர் சுசன் வோல்க், அரசியல் அதிகாரி ஜெபரி சனின் ஆகியோரும், தமிழ் முற்போக்கு கூட்டணிசார்பில் தலைவர் மனோ கணேசன், த.மு.கூ. நிதி செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர், இணைத் தவிசாளர் பேராசிரியர் விஜயசந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர் - என்று, மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (த)

## காணாமலாக்கப்பட்டோர்...

காணாமலாக்கப்பட்டவர்களை முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு அடுத்த வருடத்துக்கு தவணையிடப்பட்டது.

இது தொடர்பான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல்நீதிமன்றால் நேற்று அறிவிக்கப்படவிருந்தநிலையிலேயே, அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, மனுதாரர் தரப்பில் முற்படும் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

இறுதிப்போரின் கடைசி நாள்களில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு இன்றையதினம் (நேற்று) வழங்கப்படவிருந்தது.

இந்த வழக்குத் தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று அந்த நீதிமன்றம் ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கை மீதான வவுனியா மேல்நீதிமன்றின் தீர்ப்பு இன்று (நேற்று) வழங்கப்படுவதாக திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், அந்தத்தீர்ப்பு இன்னும் தயாரித்து முடிக்கப்படவில்லை என்று வவுனியா மேல் நீதிமன்றம் இன்று (நேற்று) எமக்கு அறிவித்துள்ளது. அத்துடன் எதிர்வரும் வரும் மாசி மாதம் 14 ஆம் திகதி இந்த உத்தரவு அறிவிக்கப்படும் என்ற விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு இலங்கை இராணுவத்துக்கும் அரசாங்கத்துக்கும் சட்டமா அதிபருக்கும் எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மக்கள் காணாமல் போனமை தொடர்பாக இலங்கை இராணுவமும் அரசாங்கமுமே பொறுப்புக்கூற வேண்டும் என்ற விடயத்தை கருப்பொருளாக கொண்டு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது" என்று தெரிவித்தார்.

குறித்த வழக்கில் இராணுவத்தின் சார்பாக அவர்களுடைய சட்டத்தரணிகள் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர். அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தை சேர்ந்த சிரேஷ்ட அரசசட்டவாதி யொகான் அபேவிக்கிரம பிரசன்னமாகியிருந்தார். வழக்கைத் தாக்கல் செய்த மனுதாரர்களான வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களின் குடும்பத்தினரும் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர். (த-110)

## யாழ்ப்பாணத்தில்...

மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்ட நபருக்கே மலேரியாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

மல்லாகத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவருக்கே மலேரியாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர், இரு வாரங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்து, நேற்றுமுன்தினம் புதன் கிழமை யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார்.

கடுமையான காய்ச்சல் மற்றும் மலேரியா அறிகுறிகளுடன் காணப்பட்ட அவர், அன்றிரவே (நேற்றுமுன்தினம்) 8 மணியளவில் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு ஏற்பட்ட அறிகுறிகள் தொடர்பில், மருத்துவமனைத் தரப்பு, யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியாத் தடுப்பு மருத்துவ அதிகாரிக்குத் தெரிவித்தது. குறித்த நோயாளிக்கு மலேரியா உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர் தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மலேரியா அற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெற்றுள்ள போதிலும், வெளிநாடுகளிலிருந்து வருபவர்களால் மலேரியா பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மலேரியா எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நாடுகளுக்குச் செல்பவர்கள் மலேரியா முன்னெச்சரிக்கை, மருத்துவ வழிகாட்டுதல்களை தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரிகளிடம் பெற்றுச் செல்லுங்கள் என்று, யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியாத் தடுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் அ.ஜெயக்குமாரன் அறிவுறுத்தியுள்ளார். (த-5)

## விளையாட்டு....

இராமநாதன் வீதியில், நாச்சிமார் கோவிலடியை அண்மைத்த மேல்மாடிக் கட்டடத் தொகுதியில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலையைச் சேர்ந்த 31 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அச்சகம் ஒன்றில் பணிபுரியும் அந்த இளைஞன், தனது காதலி என்றுகூறப்படும் பெண்ணை விளையாட்டுக்கு அச்சுறுத்த முற்பட்டு, வீடியோ அழைப்பை ஏற்படுத்தினார். அந்தப் பெண் பார்க்கும் வகையில் போனை வைத்துவிட்டு விளையாட்டுக்காக அச்சுறுத்த முற்பட்டபோது எதிர்பாராதவிதமாக அவர் நின்றிருந்த கதிரை இடறுப்பட்டதால், கழுத்தில் கயிறு இறுகி உயிரிழந்தார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் நேரில்சென்று பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டார்.

சம்பவ இடத்தில் பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டனர். சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (த-26,125)

## இந்தியா.....

னார். அதற்குப் பதிலளித்த அங்கிருந்த இராணுவ அதிகாரி, 30 கிலோமீற்றர் என்று குறிப்பிட்டார். அதன்பின்னர், ட்ரோன் கமரா பறக்க விடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

இவ்வாறானதொரு கேள்வியை வெளிப்படையாகவே சீனத் தூதுவர் ஏன் எழுப்பினார் என்பது கேள்விக்குரிய விடயமாக சமூக ஊடகங்களில் பேசப்படுகின்றது.

வடக்குக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கி செங்ஹொங் தலைமையிலான குழு வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் மற்றும் மன்னார் உள்ளிட்ட பல பகுதிகளையும் சென்று பார்வையிட்டுள்ளது.

வடக்கின் முக்கியமான தீவுகளான நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு என்பவற்றில் சீனா சூரிய மின்திட்டத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தது. ஆனால் மூன்றாம் தரப்பின் பாதுகாப்பு குறித்த கரிசனை காரணமாக திட்டத்தை மாலைதீவுக்கு மாற்றுவதாக சீன தூதரகம் அறிவித்திருந்தது.

இந்தநிலையில், சீனக்குழு வடக்கு மாகாணத்துக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. (த-இ)

## காணி.....

சுவீகரிப்புக்கு எதிரான போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நகுலேஸ்வரம் மற்றும் காங்கேசன்துறை மேற்கு (ஜே233, ஜே226) கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள 30 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியே சுவீகரிக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு தொடக்கம் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து பின் கடற்படையின் தேவைக்காக சுவீகரிக்கப்படவிருந்த நிலையில், பல தடவைகள் பொதுமக்களால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது, 'நகர அபிவிருத்தி' என்னும் பெயரில் காணி சுவீகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவே, குறித்த காணி அளவீட்டை தடுத்து நிறுத்தும் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல் பிரதிநிதிகளை வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினர் சஜீவன் கோரிக்கை விடுத்துள்ளார். (த-125)

## 20ஆம்....

யில் நகரும் வாய்ப்புள்ளது. இதனால் எதிர்வரும் 20ஆம் திகதிவரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது தொடக்கம் கனமழை வரை கிடைக்க வாய்ப்புள்ளது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கனமழை கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா குறிப்பிட்டுள் ளார்.

பொதுவாக வங்காள விரிகுடாவில் உருவாகும் தாழமுக்கங்கள் மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்வதே வழமையாகும். ஆனால், இந்த தாழமுக்கம் வழமைக்கு மாறாக கிழக்கு, வடகிழக்கு திசையில் நகர்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## மன்னார்....

நிலையில், சீனத்தூதுவர் நேற்றுமாலை அங்கு சென்றார்.

அங்கு சென்ற அவர், மாவட்டக் கடற்றொழிலாளர்களுக்கு சுமார் 20 மில்லியன் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளை வழங்கினார். மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்கள் சங்கத்தினரையும் சந்தித்தார்.

கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்கும் அவர் பயணம் மேற்கொண்டார். அதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கே.திலீபன் கலந்து கொண்டிருந்தார். (த-56)

## உயர்தரப்....

அதன்படி, எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகி, மார்ச் மாதம் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதறியது அடுப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உணவகத்தில் உள்ள எரிவாயு அடுப்பு நேற்றுக் காலை திடீரென வெடித்துச் சிதறியது.

உணவகத்தில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பணியாளர்களுக்கு இந்த வெடிப்புச் சம்பவத்தில் காயம் எதுவும் ஏற்படவில்லை என்று சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்தது.

## குருதிக் கொடை

யாழ்ப்பாணம், டிசெ.17

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகமும் உத்தியோகத்தர்களும் இணைந்து குருதிக் கொடை ஏற்பாடு செய்துள்ளனர்.

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த 9 ஆம் திகதி இரண்டு வருடத்தை நிறைவு செய்தமையை முன்னிட்டு, கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியிலுள்ள ஞானோதயா வித்தியாலயத்தில் இன்று காலை 9 மணிக்கு குருதிக்கொடை நடைபெறும் என்று தெரிவித்துள்ளனர்.

(ஒ-ரி1)


**பெயின்ட், கட்டட வேலை ஒப்பந்தகாரர் தேவை**

யாழ். கொழும்பிலுள்ள அரச கட்டடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பெயின்ட், கட்டட வேலை செய்பவர்கள் உடன் தேவை. 076 8936 169 (CS 895) (1/6)

**English Classes**

Gr. I to O/L
(வீடு வந்து கற்பிக்கப்படும்)
*Grammar and Syllabus
T.P.: 077 331 4608
(cs.897) (2.6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் 5 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(லங்கா பாம் அருகாமை)
077 6585 999
077 6234 204
(CS 898 A) 1-6

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மயிலிட்டி B.C.றோட், சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
Call: 076 8909 259
077 0150 353
(CS 863 B) 1-6

**எழுதுவினைஞர் தேவை**

யாழ். காங்கேசன்துறையிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணினி அறிவுள்ள க.பொ.த. உயர்தரம் நிறைவுசெய்த, மொழியாற்றல் உள்ள பெண் எழுதுவினைஞர் தேவை. தகுதியும் ஆர்வமும் உடையவர்கள் கீழ்கண்ட மின்னஞ்சலிற்கு தங்கள் சுயவிபரங்களை அனுப்பிவைக்கவும்.
E.mail: cocowindshotel@gmail.com
076 016 0959

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை பகுதியில் கணக்கர் வளவு 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 m தூரம்.
பார்வையிடும் நேரம்: காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 814 7389
070 705 1655
(CS 41662) 1-6


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07.07.1929 — விண்ணில் 17.12.2020

### அமரர் திரு. K.K நடராஜா

(இளைப்பாறிய அதிபர், தபாற் கந்தோரடி, காரைநகர்)

எமது குடும்பத்தின்
பாசமிகு தலைவனாய் திகழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!

நீங்கள் நிறைவாக
வாழ்வாங்கு வாழ்ந்தீர்கள், இவ்வுலகில்!!

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்களை இழந்த துன்பமும் துயரமும்
எங்கள் மனதை விட்டு மறையவில்லை!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(CR 36737) (3/6)

குடும்பத்தினர்


**காணி தேவை**

யாழ். உரும்பிராய், ஊரெழு மற்றும்
இராஜபாதை வீதியில்
1 1/2, 2 பரப்பளவான காணி தேவை.
உரிமையாளர் தொடர்புகொள்வது
விரும்பத்தக்கது.
077 400 1836

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச்
சேர்ந்த 1993 இல் பிறந்த அத்தம்
நட்சத்திரம், செவ்வாய் 7, கிரகபாவம் 17
உடைய அரச தொழில் புரியும்
மணமகளுக்கு பொருத்தமான
மணமகன் தேவை.
(தரகர் தேவையில்லை)
077 614 7393


## நீங்கா நினைவுகளுடன்

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும்,
வல்வெட்டித்துறை, முல்லைத்தீவு, கைதடி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம் போன்ற
இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட

அப்பா

### இரகுநாதபிள்ளை துரைரெட்ணம் (கணக்கர்)

Ragunathapillai Thurairetnam

க.பொ.த (உ.த) கணிதப் பிரிவு
(English Medium)
நாடக ஆசிரியர்.
வர்த்தகர்



தோற்றம் 29.07.1933 — மறைவு 20.12.1992

அம்மா



### திருமதி துரைரெட்ணம் இராஜேஸ்வரி

Mrs. Thurairetnam Rajeswary

முதலாவது மாணவி (பெண்) பல்கலைக்கழக அனுமதி பெற்ற
– யாழ். சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.
B.A. – பேராதனைப் பல்கலைகழகம், கண்டி.
முன்னாள் - அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி.
Former. - Superintendent of "The State Home for Elders, Kaithady
சமூக சேவைகள் உத்தியோகத்தர் - சாவகச்சேரி
(Social Services Officer – Chavakachcheri)
மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் - முல்லைத்தீவு.
(District Development Officer – Mullaitivu)

தோற்றம் 15.06.1942 — மறைவு 29.08.2021

தம்பி

### செல்வன் துரைரெட்ணம் இராஜரகுநாத்

Thurairetnam. Raja Ragunath

மாணவன் முல்லைத்தீவு
ம.வி (க.பொ.த சா.த -1989)

தோற்றம் 30.01.1974 — மறைவு 12.09.1991



தம்பி



### துரைரெட்ணம் சந்திரநாத்

Thurairetnam Chandranath

மாணவன் - தூய. பரியோவான் கல்லூரி
யாழ்ப்பாணம்.
St. John's College, Jaffna - A/L Bio. 2002
(க.பொ.த உ.த –விஞ்ஞானப் பிரிவு -2002 )
Student – University of Colombo School of Computing – Bachelor of Information Technology - 2nd year
முன்னாள் உரிமையாளர் -
மினி பஸ் 29-8113
(யாழ்ப்பாணம் - கொடிகாமம்)

தோற்றம் 17.12.1983 — மறைவு 27.03.2007

வல்வெட்டித்துறை

குடும்பத்தினர்
021 226 5038



மகள் - பொன்னரசி
முன்னாள் ISA-English
வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி.



மகள் - மலரரசி
முகாமைத்துவ உதவியாளர், பிராந்திய சுகாதார பணிமனை, முல்லைத்தீவு.

(cs 41533) (2.6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.